Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

*Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.*

தொகுதி 5 } 1914ஹ நவம்பர்மீ 15உ / ஆனந்தஹ ஐப்பசிமீ 30உ { பகுதி 7

அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A., B.L., F.T.S. பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

CONTENTS.

பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். 241

From the Editor—A. Rangaswamy Iyer.

2. சிறுவர்பால் பிரஹ்மக்ஞானிகளுடைய கடமை B. S. ராமசுப்பையர். 250

Duties of Theosophists to Children—B. S. Ramasubbier.

3. வருங்கால லக்ஷ்யங்கள்—மதம்–Mrs. அன்னிபெஸண்டு 257

Ideals of the Future—Religion–Mrs. Annie Besant.

4. காலமும் கன்மமும்—ஆத்தங்குடி T. R. M. M. சுப்பராமஐயர். 262

Our Age & Our duties—Attangudi T. R. M. M. Subbaramier.

5. அவதாரங்கள்—கே. கோடீசுவர ஐயர். 267

Avatars—K. Kotiswara Iyer.

6. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தர் 273

Children's Corner—Vasanthananda

7. புஸ்தக வரவு. 277

Review of Books.

8. சமாசாரம். 278

News.

---

## *Ready for Sale.*

*The English Translations of:—*

**Thirty Minor Upanishads Rs. 3-8-0**

**Laghu Yoga Vasishta Rs. 2-0-0**

**Professor Bergson & the Hindu Vedanta. Rs. 0-4-0**

**without postage.**

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq.**

Theosophical Society, Adyar, Madras.

229

# பூர்ணசந்திரோதயம்.


| தொகுதி 5. | 1914௵ நவம்பர்௴ 15௳<br>ஆநந்த௵ ஐப்பசி௴ 30௳ | பகுதி 7 |
|---|---|---|


## தற்கால நிலைமை.

பாண்டிய நாட்டிலுள்ள பிரஹ்மக்ஞான சங்கங்களின் 10-வது கூட்டமானது திண்டுக்கல்லில் சென்ற மாசம் 24, 25-ம் தேதிகளில் கூடிற்று அக்கூட்டம் முதலில் திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரத்தில் கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பிறகு சில அசௌகரியங்களால் அவ்விடத்தில் கூடாமல் திண்டுக்கல்லில் கூடிற்று. மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் அக்கூட்டத்தின் அக்ராஸநம் வகித்தார்கள். 24-ம் தேதி காலை 10 மணிக்கு திண்டுக்கல் ரயில்வே ஸ்டேஷனில், அம்மயநாயக்கனூர் சின்ன ஜமீன்தார் மகா-ா-ா-ஸ்ரீ S. பொம்மாச்சி நாயக்கரவர்களும், திண்டுக்கல் முனிஸிபல் சேர்மன் மகா-ா-ா-ஸ்ரீ குப்புஸாமி ஐயரவர்களும், மற்றும் திண்டுக்கல், மதுரை முதலான இடங்களின் பிரதான நகர்வாஸிகளும் அன்னிபெஸண்டு அம்மாளவர்களுக்கு நல்வர்வு கூறி, திண்டுக்கல்லில் நூதனமாய்க் கட்டி முடிக்கப்பட்ட பிரஹ்மக்ஞான ஸபைக் கட்டிடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள்.

*
* *

அவ்விடத்தில் அம்மையவர்களை யுபசரித்து, திண்டுக்கல் பிரஹ்மஞான ஸபைக் காரியதரிசியும் முனிசிபல் சேர்மனுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ குப்புஸாமி ஐயரவர்கள் ஒரு உபசரிப்புப் பத்திரிகை வாசித்தார்கள். அப்பத்திரிகை மூலமாய் திண்டுக்கல் சபையோர்களுக்கு அம்மையாரவர்களிடம் இருக்கும் நன்றி யறிதலையும் விசுவாஸத்தையும் வெளியிட்டும், உலக க்ஷேமார்த்தம் ஸதா முயன்று வரும் அவர்களால் பிரதமப் பிரவேசம் செய்யப்பட்ட கட்டிடமானது திண்டுக்கல்லில் நன்மையைப் பரவச் செய்யத் தக்கதென்ற நம்பிக்கையும் கூறப்பட்டது. அதற்கு மறுமொழியாக அம்மையாரவர்கள் கூறினதாவது:—"பிரஹ்மஞான சபையின் உபயோகத்திற்காக ஒரு கட்டிடம் ஏற்படவேண்டியது அவசியமாயினும், அச்சங்கத்தின் மெம்பர்களின் சிரத்தையும் ஊக்கமுமே, அதற்குப் பலத்தைத் தரத்தக்கன வென்றும், அம்மெம்பர்களே உண்மையில் அச்சபையின் கட்டிடத்தைத் தாங்கும் சுவர்களாகவும், கட்டிடத்தின் மச்சாகவும் அமைவார்களென்றும், ஒரு பிரஹ்மஞான சங்கத்தின் மெம்பர்கள் தம்மைச் சுற்றியிருக்கும் அறிவின்மையாகிய அந்தகாரத்தைப் போக்குவதற்குரிய ஞான தீபத்தைத் தேடவேண்டுமென்றும், ஒரு கிணற்றின் ஜலம் எவ்வளவுக்கெவ்வளவு இறைக்கப்பட்டு உபயோகப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதன் ஜலம் சுத்தமாய் ஊறிப் பெருகுகின்றது போல் நாம் அறிவைப்பரவச்செய்தால்மட்டும் நமது அறிவு விருத்தியாகிறதென்றும் உபயோகப்படாமல் தேங்கிக் கிடக்கும் தண்ணீர் உள்ள கிணறு அசுத்தமாய்ப் பிணியைப் பரவச் செய்கிறது போல அறிவைத் தனக்கு மட்டும் கைப்பற்றிப் பிறருக்குபயோகப் படுத்தாமலிருக்கும் ஒருவன் பாழ்ங்கிணற்றை ஒத்திருக்கிறான் என்றும், இந்து மதத்தில் லௌகிக வைதிக பிரவிர்த்திகளென்ற வேறுபாடின்றி உலகத்தில் எல்லாச் செயல்களும் ஈசுவரனைக் காரணமாகக் கொண்டிருப்பனவாகையால், அவரே ஏக கர்த்தாவாய் எல்லாப் பிரவிர்த்திகளையும் கைக்கொண்டிருக்கிறார் என்னும் கொள்கை உள்ளதென்றும், திண்டுக்கல் பிரஹ்மஞான ஸபையிலிருந்து அப்பிராந்தங்களில் மதம், கல்வி, ராஜரீகம், ஆசார சீர்திருத்தம், வியாபாரம் முதலியன ஸம்பந்தமாய்ப் பொதுநன்மைக்காக உழைப்பவர்கள் ஏற்படவேண்டு

மென்றும், அக்கட்டிடத்தை, பூர்ண ஞானத்தை யடைந்ததன்மை யினலே மானிடர்களுக்குக் கைங்கர்யம் செய்கிறவர்களாக ஏற்பட்டிருக்கிற ரிஷிகளின் நாமத்தை முன்னிட்டுத் தாம் பிரதிஷ்டை செய்வதாகவும் சொன்னர்.

* * *

அம்மயநாயக்கனூர் சின்ன ஜமீன்தார் மகா-ா-ா-ஸ்ரீ S. பொம்மாச்சி நாயக்கர் அவர்களால் நன்கொடையாக ஏற்படுத்தப்பட்ட ஒரு கிணற்றையும், அம்மையாரவர்கள் அன்று பிரதிஷ்டை செய்தனர்.

* * *

மேற்படி கூட்டத்திற்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சினப்பள்ளி, தஞ்சாவூர், தென்னற்காடு, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகளும் நண்பர்களும் வந்திருந்தனர். அவர்களின் ஸங்கியை சுமார் 120 இருக்கும்.

* * *

அன்று சாயுந்திரம் ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாள் அவர்கள் "ஆங்கிலேய ராஜ்ய மண்டலத்தில் இந்தியாவின் நூதனபதவி" என்ற விஷயத்தை உபந்யஸித்தனர்.

* * *

இந்தியாவில் சென்ற 21 வருஷங்களில் அநேக மாறுதல்கள் உண்டாயிருக்கின்றன வென்றும், தாம் முதல் முதல் இந்து தேசத்திற்கு வந்த காலத்தில் அது நித்திரை யடைந்தாற்போல் தோன்றிய போதிலும் அதின் சென்ற கால சரித்திரத்தைத் தெரிந்து அதன் வருங்கால பதவியை யூஹிக்கக் கூடியவர்கள், கிரீஸ், ரோமாபுரி, அஸிரியா எகிப்து முதலிய தேசங்கள் எவ்வாறு பூமண்டலத்தில், மிகுந்த நாகரிகத்துடன், விளங்கி மறைந்தனவோ, அவ்வாறு இந்தியா மறையத்தக்க தல்லவென்று நிச்சயமாகக் கொண்டிருக்கிறர்களென்றும், ஆனல் அது முன்னிருந்ததைக் காட்டிலும் அதியுன்னதமான ஸ்திதியையடையவேண்டுமாகில், அநேக மாறுதல்கள் ஏற்படவேண்டுமென்றும், ஆதிகாலத்தில் அத்தேசத்தார்கள் ஞானமார்க்கத்தில் நின்று எல்லா லௌகிக ஸம்பத்தையும் அடைந்தார்களென்றும், ஆத்ம ஞானத்தைத் தேடுவோர்களுக்கு மேன்

மையைக்கொடுக்கக்கூடிய ஐசுவரியங்களும் உண்டாவதில் யாதொரு தடையும் ஏற்படமாட்டாதென்பதை அவர்களுடைய பூர்வ சரித்திர மூலமாய் நிரூபித்திருக்கின்றன ரென்றும்,

***

முற்காலங்களில், இராஜாக்களுக்கும் மேன்மையாய் விளங்கின ரிஷிகள் பஹிரங்கமாக வெளித்தோன்றி ஜனஸமூஹங்களில் ஸம்பாஷணை செய்து, அரசர்களிடம் சென்று அவர்கள் எவ்வாறு அரசாட்சி செய்கிறார்களென்றும், தர்மம் எவ்வாறு நடைபெறுகிற தென்றும், அவர்களுடைய ஸைந்யங்கள் 'நல்ல நிலைமையில் இருக்கின்றனவா என்றும், போரில் மீடிந்த வீரர்களின் குடும்பஸ்தர்கள் சரியாய்ப் பாதுகாக்கப்படுகிறார்களா வென்றும் வினவிய காலத்தில் இந்து தேசமானது எவ்வகையிலும் மேன்மையாக விளங்கின தென்றும் அக்காலங்களில் மேலான தத்துவ ஞானிகள் தோன்றினது மல்லாமல் அறிவில் மிகுந்த வித்வான்களும் பண்டிதர்களும் கவிஞர்களும் பிரகாசித்தன ரென்றும், வியாபாரமும் ஐசுவரியமும் விருத்தியடைந்து கல்வி பரவி நின்ற தென்றும்,

***

இப்போது இந்தியா தேசத்தில் 100 பேர்களில் 94 பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயிருப்பினும், இராமாயணத்தில், அயோத்தியில் எழுதப்படிக்கத் தெரியாதோர் எவரும் இலர் என்றும், வியாபாரம் முதலியவைகளில் மேம்பாட்டை அடைந்திருந்தார்க ளென்றும் கூறப்பட்டிருக்கிற தென்றும், அவ்விதமான பதவியை முற்காலத்தில் அடைந்த ஜாதியார் வருங்கால நாகரிகத்தில் ஒரு மேன்மையான ஸ்தானத்தை வகிக்கத் தக்கவர்க ளென்றும், இந்தியாவின் சரித்திரத்தைக் கற்காதவர்கள் வியாபாரம், கைத்தொழில் இவைகளில் இந்தியர்கள் மேற்றிசையோர்களிடம் போய் மாணாக்கர்போல் கற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்களென்றும் இந்தியர்கள் கைத்தொழில்களில் அடைந்திருந்த மேன்மையைத் தெரிந்து கொண்டு ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவுக்கு வந்தார்களென்றும், முற்காலங்களில் இந்தியாவிற்கும் அலெக்ஸாண்டிரியா, ரோமாபுரி, யூதர்களின் தேசம், வெனிஸ் நகரம், உலாந்த தேசம் முதலான இடங்களுக்கும் பல வியாபார ஸம்பந்தங்கள் ஏற்பட்டு வந்தன வென்றும்,

பிரஜைகளுடைய சம்மதத்தையறிந்து இராஜாங்க விஷயங்களை நடத்துவது நவீன அப்யாஸமல்லவென்பதை ரூபிப்பதற்கு தசரதர் ஸ்ரீ இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்ய மந்திரிகளுடன் கலந்து யோசித்த பிறகு அயோத்தியா நகரவாசிகளைக் கூப்பிட்டு அவர்களுடைய சம்மதத்தையும் பெற்றுக்கொண்டாரென்று இராமாயணம் கூறுவதே திருஷ்டாந்தமென்றும், பூர்வ காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் பொதுவிஷயங்களைக் கவனித்து நடத்துதற்கு கிராம பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டிருந்தனவென்றும், தற்காலத்திலும் கிராம பஞ்சாயத்துக்கள் வெகு அவசியமென்றும், அவைகளுக்கு மேலாக, தாலூகா சபைகளும், அவைகளுக்கு மேலாக ஜில்லா ஸபைகளும், அவைகளுக்கு மேல் இராஜதானி சபைகளும், அவைகளுக்கு மேல் கவர்னர் ஜெனரல் கவுன்ஸிலும் வரிசைக்கிரமமாய் ஏற்பட்டு வரவேண்டுமென்றும், இங்கிலாந்தும் இந்தியாவும் ஒன்றுசேர்ந்து ஏகோபித்து உன்னதமான பதவியை அடையப்போகிறதென்றும்,

***

இந்தியாவில் மற்ற ஐரோப்பிய ஜாதியார்கள் பிரவேசித்தும் வேரூன்றாமல், ஆங்கிலேயர்கள் மட்டும் இத்தேசத்தில் நீடித்து, நின்று இங்கிலீஷ் பாஷையானது உலகமுழுவதும் பரவி மற்ற பாஷைகளைக் காட்டிலும், பெரும்பான்மை மனிதர்களுக்குத் தெரிவதால், ஹிந்துக்களுடைய புராதன நூல்களில் வெளியிடப்படுகிற தத்துவங்களை உலகத்தில் பரவச்செய்ய, அப்பாஷை தக்க கருவியாகும் என்றும், கைத்தொழில் வியாபார வழிகளில் இங்கிலாந்து முதன்மையாயிருக்கிறபடியால், இந்தியாவுக்கு அவ்விஷயத்தில் உதவிபுரியக்கூடுமென்றும், ஸ்வேச்சை (Freedom) யைக் கொண்டாடுவதிலும், மற்ற தேசங்கள் அந்த ஸ்வேச்சையை யடைவதிலும். அப்படி ஸ்வேச்சைக்காக உழைத்த மாஸினி (Mazini) கோஸத் (Kossuth) குரோபட்கின் (Kuropatkin) முதலிய தேசாபிமானிகள் இங்கிலாந்தில் அடைக்கலம்புக, அவர்கட்கபயம் ஈந்ததிலும் முதன்மையாய் நின்ற ஆங்கிலதேசத்தின் ராஜதந்திரிகளாகிய லார்ட் மார்லி, லார்ட் மிண்டோ பிரபுக்கள் மூலமாய் ஏற்படுத்தப்பட்ட இராஜாங்க சீர்திருத்தங்களாகிய ஜனப்பிரதிநிதிஸபைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றனவென்றும்,

இங்கிலாந்தையும் இந்தியாவையும் ஒன்று சேர்க்க நம்முடைய இராஜப் பிரதிநிதியாகிய லார்ட் ஹார்டிஞ்சு அவர்களுடைய ஏற்பாட்டினால், இந்திய சிப்பாய்கள் ஐரோப்பாவுக்குச் சென்று இப்பொழுது போர்புரிந்து வருகிறார்களென்றும், ஜெர்மன் தேசத்து சக்ரவர்த்தியானவர், இந்திய சீக்கர் ஜாதியைச்சேர்ந்த காலாட்களிடம் மட்டும் ஜெர்மன் காலாட்கள் அஞ்சத்தக்கவரென்று வெளியிட்டாரென்றும், பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் நாணயத்தையும் யோக்கியதையையும் ஸத்யத்தையும் காப்பாற்றுவதற்கு இப்போரில் புகுந்திருக்கிறார்களென்றும் இப்பொழுது யுத்தத்தில் எதிர்த்து நிற்கும் இருதிறத்தினருக்குள் பூமண்டல ஆதிபத்யத்தைக் குறித்து (World Empire) இருவிதக் கொள்கைகள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும்,

***

அவ்வாதிபத்யத்தைக் குறித்து ஜெர்மானியர், நியாயம், ஸத்யம் இவைகளைக் காட்டிலும் பலமே பிரதானமென்ற கொள்கையைக் கைக்கொண்டு இராஜ்யத்திற்கு எக்காரியம் அநுகூலத்தைக் கொடுக்கக்கூடியதோ, அக்காரியம் நியாய விரோதமுள்ளதாயினும் செய்யத்தக்கதென்றும், ராஜ்யத்தைக் காட்டிலும் மேலானவஸ்து இல்லையென்றும், அதின் அபிவிருத்திக்காக எவ்வித பலாத்காரமும் செய்யத் தகுமென்றும் சித்தாந்தப்படுத்தி யிருக்கிறார்களென்றும், பிரிட்டிஷ் ஆதிபத்யத்தைக் கைக்கொண்டவர்கள் அதின் ஆதிபத்யத்திற்குள்ளடங்கிய ஒவ்வொரு நாடும் அவ்வாதிபத்யத்திற்குட்பட்டு சுய அரசாட்சியை அடைவதையே முடிவாகக் கருதவேண்டுமென்ற கொள்கையைக் கைக்கொண்டு இந்தியாவில் அதற்கநுகுணமாகவே முனிஸிபல் ஆளுகையும் ஜனப் பிரதிநிதிகளுடன் கூடிய சட்ட நிரூபண சபைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்றும், அந்த ராஜ்ய மண்டலத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவர்களுடைய இயற்கைக்கும், தன்மைக்கும், குணங்களுக்கும் தக்கவாறு, மேல் நோக்கிச் செல்லவேண்டுமென்றும்,

***

ஆகையால் தற்காலத்தில் இத்தேசத்தின்கண் மாறுதல்கள் அதிவேகமாகத் தோன்றிக்கொண்டு வருகின்றனவென்றும், அம்

மாறுதல்கள் மூலமாய் இந்தியாவும் உயர்ந்த பதவியை அடையப் போகின்றதென்றும், ஆகையால் இந்தியர்கள் அந்த ஸ்தானத்தை வகிக்கத்தக்க பலத்தையும் விடாமுயற்சியையும் சிரத்தையையும் காண்பிக்கவேண்டுமென்றும் இந்த பிரிடிஷ் இராஜ்ய மண்டலத்தில் அவர்களுக்குரிய ஸ்தானத்தை ஸந்தோஷத்துடன் அடைய வேண்டுமென்றும் சொன்னார்கள்.

***

அன்று சாயங்காலமே மகா-ா-ா-ஸ்ரீ T. இராமச்சந்திர ராயரவர்கள் இந்தியாவினுடைய அபிவிருத்தியைப் பற்றி உபந்யாஸம் செய்தார்கள். மாது ஸ்ரீ அசலாம்பிகை அம்மாளவர்கள் பெண் கல்வியைக் குறித்து, சபையோர்கள் ஆனந்திக்குமாறு, உபந்யாஸம் செய்தார்கள்.

***

மறுநாள் காலை 9 மணிக்கு, "இவ்வுலகத்தின் விகாஸத்தை ஆளுவதற்கு, அதிகார புருஷர்களாயிருக்கிற மஹர்ஷி ஸங்கத்தைக்" குறித்து அக்ராஸநாதிபதி யவர்கள் உபந்யாஸம் செய்தனர். பூர்ண ஞானத்தோடு உலகத்தை நடத்தி, பூர்ண அன்போடு உலகத்தை அவர்கள் காப்பாற்றுவிடில், உலகத்தில் தீமை மேல் நோக்கும், நன்மை தோல்வியடையும். முற்காலங்களில் ரிஷிகள் ஜனங்கள் மத்தியில் வெளித்தோன்றினார்கள். தற்காலங்களில் ஸாதாரண மனிதர்களுக்கு ரிஷிகள் பேரில் உள்ள பக்தி குறைவுபட்டதால் அவர்கள் அப்படித் தோன்றுகிறதில்லை. தேவதைகளும் ரிஷிகளுடைய முயற்சிகளுக்கு ஒத்திருக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்திற்கும் அதிஷ்டாதாக்களாக விருக்கும் தேவதைகள் ஒருவரை யொருவர் ஸந்திக்கிறார்கள். அவரவர் தேசத்தில் நடத்தவேண்டிய விஷயங்களை முன்னாடியே யோசனை செய்துகொள்ளுகிறார்கள். உலகங்களை, மறைந்து நின்று நடத்தி வருகிறார்கள்.

***

ருஷியா, ஜப்பான் தேசத்தார்களுக்குள் ஏற்பட்ட யுத்தத்தினால் கீழ்த்திசையோர்களின் மேல் நோக்கங்கள் (Idelas) மேற்றிசையோர்களின் நாகரிகத்தினது வலிமையால் தாக்கப்பட்டு நாச

மடையாவண்ணம் நிலை நிறுத்தப்பட்டன. ஆர்யவர்ண தர்மத்தின் மேல் நோக்கங்கள் ஆசார்யன், வீரன், வணிகன், ஸேவகன் இவர்களுடைய குணங்களை ஆதாரமாக வுடையன. குருக்ஷேத்திர யுத்தத்திற்குப் பிறகு வர்ண தர்மங்கள் சீர்குலைந்தன. க்ஷத்திரிய, வைசிய தர்மங்கள் மேற்றிசைக்குச் சென்று முதலாவது நான்காவது வர்ணங்களின் தர்மங்கள் மட்டும் இத்தேசத்தில் தங்கின. க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்ட ஜப்பான் ருஷியாவை எதிர்க்கத் தகுதியாயிற்று. ஸாமர்த்தியமுள்ள ஜீவர்கள் ஜப்பானில் ஜன்மம் எடுக்க அனுப்பப்பட்டார்கள். சக்தியில் குறைவுள்ளவர்கள் ருஷியாவில் பிறந்தார்கள். ருஷியா தேசத்தின் தேவதையும் ரிஷியும் அக்காலத்தில் ருஷியாவைத் தோல்வியடையும்படி செய்து அக்கஷ்டதசை வழியாய் அத்தேசத்தாருக்கு அறிவுறுத்தி, தற்கால யுத்தத்தில் வெற்றியடையக்கூடிய பயிற்சியைப் பெறும்படி செய்திருக்கிறார்கள்.

* * *

மேற்கூறிய அதிகார புருஷர்களாகிய ரிஷிகளுடைய வேலையை உலக சரித்திரத்தில் நிகழும் ஸம்பவங்களினின்று யூகிக்கலாம். எல்லாச் செய்கைகளையும் ஈசுவரனுடைய கைங்கரியம் போல் பாவிக்கும் மனுஷ்யன்தான் அவ்வதிகார புருஷர்களுடைய ஸ்தானத்தை வகிக்கத்தக்கவன். அவன் ஆரம்பத்தில், பிரவிர்த்தி மார்க்கத்தை விட்டு, நிவர்த்தி மார்க்கத்தில் புகுந்து விவேகம், வைராக்கியம், ஷட்ஸம்பத்தி, முமுக்ஷுத்வம் என்ற குணங்களைத் தன்னிடத்தில் கைக்கொண்டு, ஸ்ரீ சங்கராசாரியரால் கூறப்பட்ட பரிவ்ராஜக, குடீசக, ஹம்ஸ பரமஹம்ஸ ஸ்தானங்களைப்படிப்படியாக அடைந்து முக்தனானபிறகு, உலக விகாஸ முறையின் ஆளுகைக்குரிய மஹர்ஷி ஸங்கத்தில் தானும் ஒரு அதிகார புருஷனாகிறான். இவ்வதிகார புருஷர்கள் அனைவரும் ஜீவன் முக்தர்கள். அவர்களில் ஒருவர் மநுவாயிருக்கிறார். மற்றொருவர் ஜகத்குருவா யிருக்கிறார். இன்னும் மற்றொருவர் மஹாசோஹன் என்று பிரஹ்மக்ஞான நூல்களில் கூறப்படுவர். இவர்களுக்கு மேல் நான்கு குமாரர்கள் உளர். அவர்களில் ஸநத்குமாரர் தலைவர். அவர் இவ்வுலகிற்கு இறைவனாகவிருக்கின்றனர். இந்தியாவின் அதிஷ்டான ரிஷியானவர் நீலகிரியி

ஞளர். அவருக்குள், இத்தேசத்தின் அதிஷ்டான தேவனும் இத்தேசத்தின் நன்மைக்காகப் பிரவிர்த்தித்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் ஒன்றும் ஒழுங்கு தவறிச் செல்லமாட்டாது. இந்த தேசம் அவர்களுடைய பாதுகாப்பிலிருந்துகொண்டு மேல்நோக்கிச் செல்லப்போகிறது.

***

அந்தப் பதவிக்கு இத்தேசத்தார்களைத் தகுதியாக்கும்படி செய்ய இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் ஏகோபித்து முயற்சித்தல் வேண்டும். இத்தேசத்தார்களுக்கு உரித்தான கல்வியைப் பரவச் செய்தும், மதாபிவிருத்தியை உண்டு பண்ணியும், அதற்கு ஒத்த ஆசார சீர் திருத்தங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தும் வெளிப் பிரதேசங்களுக்கு ஸமுத்திரத்தைக்கடந்து சென்றும், வியாபாரங்களையும் கைத்தொழில்களையும் விருத்தி செய்தும் எல்லா வழிகளிலும் தேசத்தின் மேன்மையை நாடவேண்டுமென்றும் கூறினர்.

***

அன்று சாயங்காலம் ஆசார சீர்திருத்தம் என்ற விஷயத்தைப் பற்றி உபந்யாஸம் செய்தார்கள். அதைக் குறித்துப் பிற்பாடு வரைவோம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

---

காலையில் மழை பெய்தால் சாயங்காலம் வெய்யில் அடிக்கின்றது. அதே மாதிரி ஒருவன் இப்போது ஸந்தோஷப்படுகிறான், நாளை துக்கப்படுகிறான்; இப்போது சுகமடைகிறவன் நாளை துக்கமடைகிறான். பகல் வெளிச்சத்திற்குப்பிறகு இரவின் இருள் என்பது தீர்மானமே. ஆகவே இவ்வுலகம் துவந்த்வங்கள் அல்லது இரட்டைகளாலேயே அமைந்துள்ளது. சிவம், சக்தி, பிரகிருதி, புருஷன் என இவ்வாறான இரட்டையானது உலக நியதிக்கே காரணம் என நம்முடைய மத தத்துவ சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றனவல்லவா?

---

238 Roll-105
1204

# சிறுவர்பால் பிரஹ்மக்ஞானிகளுடைய கடமை.

---

அநேகருக்கு, 'பிரஹ்மக்ஞானிகள்' என்றால், பிரஹ்மத்தை யறிந்தவர்க ளல்லவா? அவர்களுடைய கடமையைப் பற்றி நாம் விசாரிப்பதேன் என்னும் சந்தேகம் நிகழலாம். பிரஹ்மத்தை யறிந்தவர்களை, இங்கே பிரஹ்மக் ஞானிகளென்று கூறவில்லை. ஆனால் பிரஹ்மத்தை யறிய முயலுகின்றவர்களையே நான் பிரஹ்மக்ஞானிகளெனக் கூறுகின்றேன். அதிலும் தியாஸபி 'யென்ற பிரஹ்மக்ஞான தரிசனத்தை யவலம்பிப்பவர்களையே பிரஹ்மக்ஞானிகளெனக் கூறுகின்றேன். அப்படிச் சொல்லலாமா? எனின்,

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே
வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:॥

என்று பகவான் கீதையிலுரைத்த வண்ணம் சொல்லலாமென்றே துணிந்தேன். பிரஹ்மக்ஞான தர்சநத்தில் நானறிந்து கொண்ட சில வுண்மைகளையும், அவற்றின் மூலமாக நான் தெரிந்துகொண்ட வண்ணம், சிறுவர்பால் பிரஹ்மக்ஞானிகளுடைய கடமையையும் இங்கு ஒருவாறு வரைவேன்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது.

இது திருமந்திரத்தின் ஆசிரியரான திருமூலநாயனருடைய வசநம். பிரஹ்மக்ஞான தர்சனத்தை யவலம்பிக்கும் என்போலிய ர்க்கு எளிதிற் புலப்படக்கூடிய அர்த்தத்தை இங்கு விசாரிக்க முயலுவோம்.

உலகத்திலுள்ள ஸகல வஸ்துக்களும் உயிர், உடல் என்ற இரு தன்மையாக விளங்குகின்றன. உயிர்ப் பாகத்தை ஸம்ஸ்கிருதத்தில் ஜீவன் என்று கூறுவதுண்டு. இனி சிவம் என்னும் பதத்தின் பொருளைப் பார்ப்போம். ஸகல வஸ்துக்களுக்கும் நிலயமாகிய நம்முடைய ஸவித்ரு மண்டலத்தின் நாயகனையே சிவமெனக் கூறுவோம். இச் சிவத்தைத்தான் பிரஹ்மக்ஞான தரிசநம் (Solar Logos) என்று கூறுகின்றது. இந்த ஸூரிய மண்டலத்தில் அவ

னன்றி ஓர் அணுவும் அசையாது. ஆயினும் அந்த அசைவானது, அதாவது சைதந்யம் எல்லா வஸ்துக்களிலும் ஒரே அளவாக விளங்குவதாகத் தோற்றவில்லை. உதாரணமாக கல் முதலிய தாதுப் பொருள்களில் ஸ்தூல திருஷ்டிக்கு சைதந்ய மிருப்பதாகவே தெரியவில்லை. நந்தேசத்து நவீன பௌதிக சாஸ்திரியான புரொபஸர் ஜெ. ஸி. போஸ் அவர்கள் சைதந்யமானது இயங்காத எப்பொருளும் இவ்வுலகிலில்லை யென்பதை, நுண்ணிய கருவிகளைக் கொண்டு பிரத்யக்ஷமாக நிரூபித்துக் காட்டுகிறார். கல் போன்ற வஸ்துக்களை ஜடமென்றுகூடக் கூறிவிடுகிறோம். தாவரங்களில் சற்று அதிகமாக சைதந்யம் விளங்குகிறது. வெயில் கடூரமாக அடிக்கும்போது செடி கொடிகள் வாடியும் ஒரு மழை பெய்த மாத்திரத்தில் அவை தலை தூக்கித் தழைத்தும் இருப்பதைப் பிரத்தியக்ஷமா யறிகிறோம். இதனினும் அதிகமாக மிருகவர்க்கங்களில் சைதந்யம் விளங்குவதும் ஹஸ்தா மலகம் போல, நாம் அறிந்துள்ள விஷயம். கடைசியாக மநுஷ்யவர்க்கத்தில் இயங்குகின்ற சைதந்யமே எல்லாவற்றிலும் மேன்மையாகப் பிரகாசிக்கின்றது. சிவத்தின் ஒரு அம்சமாகிய சைதந்யம் பற்பல வஸ்துக்களின் உடற்பாகத்தின் (அல்லது கோசத்தின் அல்லது உபாதியின்) கநம் நயத்திற்குத் தக்கவாறு பல படித்தரமாக இயங்குகின்றது. இதையே திருநாவுக்கரசு ஸ்வாமிகள்

விரகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்,
மறைய நின்றுளன் மாமணி ஜோதியான்.

என்றும் உதாஹரித்தனர். ஆகையால் சிவத்தின் ஓர் அம்சமாகிய சைதந்யம் இந்த ஸ்தூல உலகத்தில் கல், மண் முதல் மநுஷ்யன் ஈறாகவுள்ள ஜீவராசிகளில் ஒரு வர்க்கத்தை விட மற்றொரு வர்க்கத்தில் அதிகப் பிரகாசத்துடன் விளங்குகின்றதானால், இவ்வுலகத்தினும் பல்லாயிரம்மடங்கு நுண்ணிய பிரகிருதி திரவியத்தாலமைந்து ஒன்றைவிட மற்றொன்று ஸூக்ஷ்மதரமாயுள்ள அநேக லோகங்களுக்குள்ளும் அந்தர்யாமியா யிருந்து, அவைகளை ஆட்டுவிக்கும் சிவத்தின் அச்சைதந்யம், எல்லாவற்றிலும் ஸூக்ஷ்மமான உலகத்தில் எத்துணை மாண்புடன் பிரகாசிக்கும்! என்பது நம்முடைய மநத்துக் கெட்டாததாயிருக்கிறது. இந்த சைதந்யமாகிய ஒரு அம்சத்தைப்போல கணக்கற்ற அம்சங்களின் மூர்த்தியாவர் அச்சிவம்,

ஆகையால் சிவமணம் எத்தன்மையது என்பதை நாம் கிரஹிக்க இயலாதவர்களாவோம். ஆயினும், சிவமணம் பூத்தது என்றவிடத்து ஜீவன் அவாதியற்கையையே பூர்ணமாயடைதல் என்று பொருள் படுகின்றது. நிற்க.

இதற்கு ஸாம்யமாக 'பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்' என்னும் வசநம் எழுதப்பட்டிருக்கிறது. இது நம்முடையஸ்வாநுபவத்திற்குட்பட்ட விஷயமாகையால், இதைச் சற்று தீர்க்கமாக ஆராய்ந்தறிந்தால் நமக்கு நன்மை பயக்கக் கூடியதாயிருக்கும். சிவத்தினியற்கையைப்பெற்ற ஜீவனை, தானிருக்குமிடமெல்லாம் வாஸனை கமழ்கின்ற மலருக்கு ஒப்பிட்டிருக்கிறார் திருமூலர். சிவத்தினியற்கையைப் பெற்றவர்கள் தான் முக்தர்கள் என்றும் சொல்லப்படுவர். புஷ்பத்திற்கு எப்படி வாஸனையானது ஸ்வாபாவிகமோ அப்படியே இடையறாத பரோபகாரத்தையும், லோகஹிதத்தையும் தம் ஸ்வபாவமாகக் கொண்டவர்கள் முக்தர்கள். புஷ்பமானது அவ்வுருவைப் பெறுமுன் எப்படி ஒருகாலத்தில் ஸர்வ சக்தியும் அந்தர்கதமாயுள்ள வித்தாகவும், பிறகு முளையாகவும், இலைகளாகவும், கிளைகளாகவும், மொட்டுகளாகவும் இருந்ததோ, அவ்வாறே ஜீவனும் பற்பல பிராயங்களில் இருந்து, கடை முறையில் மலர்ந்த புஷ்பத்தைப்போல் முக்தியடைகின்றது என்று பொருள் கொள்ளலாம்.

இஃதிவ்வாறிருக்க, அறிவில் நமக்கு மேம்பட்ட மனிதர்களும், கீழ்ப்பட்ட மனிதர்களும், அவர்களுக்கும் கீழ்ப்பட்ட ஜீவர்கள் மநுஷ்ய வர்க்கத்திலும், மிருக வர்க்கத்திலும், தாவரவர்க்கத்திலும் விளங்குவது நாம் ஸ்வாநுபவத்திலறிந்த விஷயம். ஆகையால் அகில ஜீவர்களும் ஸ்வாபாவிகமாகவே சிவத்தினியற்கையைப்பூர்ணமாகப் பெறுவதற்கு முயன்றுவரும் நியதியொன்றுளதா? எனின், அந்த நியதியின் பெயர்தான் விகாஸமுறை என்று பிரஹ்மஜ்ஞான தரிசநம் கூறுகின்றது. விகாஸம் என்னும் பதத்திற்கு மலருதல் என்று பொருள். மலருதல், என்றால் மொட்டாயிருக்கும் பூவாகவோ அல்லது, மொட்டுக்கட்டும் சமயமாயிருக்கும் இளந்தளிர்க் கொத்தாகவோ அல்லது விதையாகவோ, எப்படியாயினும் புஷ்பத்

தின் ஓர் அம்சமாய் இருந்தாலல்லவோ அது ஸாத்தியம்! அது போலவே சிவமணம் பெறுதற்கு, ஜீவனும் சிவத்தின் ஓர் அம்சம் தானா? எனின், தாவாநலத்திற் கொப்பான ஈசுவரனின் அம்சமாகிய பொறிகளன்றோ ஜீவர்கள்! திருமந்திரத்திலும் அடியில் வருமாறு.

> "சீவ னென்னச் சிவனென்ன வேறில்லை
> சீவ னார்சிவ னாரை யறிகிலர்
> சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
> சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே"

சிவனாரை யறியும் இந்த விகாஸ முறையில் மநுஷ்ய வர்க்கத்தினராகிய நாம் பாதிதூரம் கடந்து வந்திருக்கிறோம். இவ்வுண்மையானது ஸாதாரண மநுஷ்யர்கள் யாவரும் எந்தமிருகப்பிராயத்தினின்று விகஸித்தனரோ, அதற்குரிய விசேஷ குணமாகிய தன்னயத்தையே அதிகமாகவும், குணவிசிஷ்டர்களான ஸாதுக்களின் லக்ஷணமாகிய தியாக தர்மத்தை வெகு சொற்பமாயும், தம்முடைய ஸ்வபாவத்திற் கொண்டிருப்பதனாலேயே நன்கு விளங்குகிறது. மநுஷ்ய வர்க்கத்தில் இவ்விருவித சுபாவங்கட்கும் உள்ள போராட்டமே நம்முடைய புராணங்களில் தெய்வாசுர யுத்தமாகப் பிரதீகப்படுத்தப் பட்டிருக்கிறதென்று அறிஞர் பலர் கூறுகின்றனர். மநுஷ்ய வர்க்கத்தில்தான் ஜீவனுடைய நிவிர்த்தி மார்க்கம் ஆரம்பிக்கின்றது. ஜந்தூநாம் நரஜந்ம துர்லபமென்னும் ஸ்ரீசங்கரருடைய கூற்றும், "அரிது அரிது மானிடராதலரிது" என்னும் ஔவை வசநமும் மேற்கூறிய உண்மையைக் கருதியே தான் பிறந்தனவென்று நான் யூகிக்கிறேன். ஆகையால், விகாஸமுறையில் மநுஷ்யஜன்மத்தின் முக்கியதையை உத்தேசிக்க, நம்முடைய வாழ்நாளை விகாஸமுறைக்கு முரண்படாமல், நேர்மையாகவே நடத்தவேண்டிய உத்தரவாதமும் நமக்கேற்படுகின்றது.

இனி மநுஷ்யர்களுடைய வாழ்நாட்களை நேர்மையாய்க் கழிக்க வேண்டிய முறை யென்னவென்று யோசிக்குமுன், நாம் ஒவ்வொரு வரும் நம்முடைய வாழ்நாட்களில் முப்பான்மையாக நடைபெறுகிறோம் என்பது கவனிக்கத்தக்க விஷயம். அவையாவன:—(1) நாம் செய்யும் காரியங்கள், (2) நாம் கொள்ளும் ஆசைகள் (3) நாம் நினை,

க்கும் எண்ணங்கள். இம் முக்கருமங்களை முடிக்கவல்ல மூன்று சரீரங்கள் பிரதி மநுஷ்யனுக்கும் உள்ளன. இவற்றில் ஸ்தூல சரீரத்தை மட்டும்தான் நாம் அறிவோம். மற்ற இரண்டும் ஸூக்ஷ்மமானவைகள். அவ்விரண்டு சரீரங்களுக்கும் முறையேஆசைகளும், எண்ணங்களும் உணவாகும். நம்முடைய ஸ்தூலசரீரத்தை, தேஹப்பயிற்சியாலும், சுத்த ஆஹாரத்தாலும் ஸௌக்கியமாக வைத்துக்கொள்கிறோம். அதே மாதிரி மேற்கூறிய இரண்டுஸூக்ஷ்ம சரீரங்களையும், அப்பியாஸத்தாலும், சுத்தமான ஆசைகளாலும், எண்ணங்களாலும் நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ளலாம். இம் மூன்று சரீரங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வானேன்? சுத்தமாக வைத்துக்கொள்ளாவிடில் வியாதி பீடிக்கும். இந்த மூன்று சரீரங்களிலும் பீடிக்கும் வியாதி நம்முடன் மட்டும் போகாமல் பிறரையும் பாதிக்கின்றது.

𑌮𑌨𑌸𑌿 𑌵𑌚𑌸𑌿 𑌕𑌾𑌯𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑍀𑌯𑍂𑌷𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌃
𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌮𑍁𑌪𑌕𑌾𑌰𑌶𑍍𑌰𑍇𑌣𑌿𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑍀𑌣𑌯𑌨𑍍𑌤𑌃॥

என்ற பிரகாரம் மூவுலகங்களையுமே திரிகரண சுத்தியானது புனிதப்படுத்துகின்ற தாகையாலும், திரிகரண சுத்தியின் ஆவசியகம் ஸர்வ மதஸ்தர்களுக்கும் அங்கீகார மாகையாலும், திரிகரண சுத்தியின் குறித்த லக்ஷணம் பரோபகாரமாகையாலும், எவ்வாற்றானும் இது நம்மால் கைக்கொள்ளத் தக்கதாகும். எம்மதஸ்தராயினும், இதை ஒருவராலும் மறுக்க இயலாது.

ஸ்ரீமதி அநிபெஸண்ட் அம்மையார், ஸ்ரீமான் ஸி. ஜீனராஜ தாஸர் இவர்கள் தம்முடைய நவீன கிரந்தங்களில் வற்புறுத்தி வருகின்ற விஷயமொன்றுண்டு. அதாவது எந்நாட்டிலும் குழந்தைகளே வருங்கால மஹிமைக்குரியவரென்பதும், அதாவது இன்று குழந்தைகளாயிருப்பவர்களே நாளை குடும்பிகளாக வேண்டியவர்களென்பதும், அவர்களுக்குத் திரிகரண சுத்தியின் லக்ஷ்யத்தைப் புகட்டி அவர்களை பயிற்றுவிக்க வேண்டுவது நமது கடமை யென்பதுமாம். இப்போதைப் போல், மதமானது ஏட்டுச்சுரைக்காயாக மட்டு மில்லாமல், மநுஷ்யர்களுடைய நித்ய சரியையைச் சீர்படுத்தக் கூடியதாயிருத்தல் வேண்டு மென்பதுமாம். இதை யனுசரித்து,

சிறுவர்களுக்கு(Golden Chain) ஸ்வர்ணமணிமாலை யென்ற சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் வரலாறு சென்ற மாதத்து சஞ்சிகையில் "சிறுவர்க்குரிய விஷயம்" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்தது. இச்சங்கம் மதுரை பிரஹ்மக்ஞான ஸபையாரால் ஸ்தாபிக்கப்பட்டு மூன்று வாரங்களாக ஞாயிற்றுக்கிழமை தோறும், 80 பிள்ளைகள் படிப்பிக்கப்பெற்றுவருகிறார்கள். அயலூர்களிலிருந்து சிறுவர்கள், வயது சென்றவர்கள் எல்லோருமாக 100 பேர்கள் சேர்ந்திருக்கின்றனர். இவ்வூரிலுள்ள ஸ்ரீமீனாக்ஷீ வித்யாசாலையில் 200 பெண்கள் உள்ள ஸ்வர்ண மணிமாலைச் சங்கம் ஒன்று ஏற்படப் போகின்றது. வாலிபத்தில் மனதை எவ்வளவு இலகுவாய் நல்வழிப்படுத்த முடியுமோ அவ்வளவு, இலகுவாய் வயது சென்ற பிறகு, முயற்சித்தல் அஸாத்தியம். இப்பத்திரிகையில் "சிறுவர்க்குரிய விஷயம்" என்று வெளிவரும் வியாஸமே மறுபடி துண்டுப்பத்திரிகையாகப் பிரசுரிக்கப் பெற்று ஸ்வர்ண மணிகள் அனைவர்க்கும் பிரதிமாசமும் இனும் கொடுக்கப்படுகிறது.

திரிகரண சுத்தியின் லக்ஷ்யத்தை வாலிபர்களுக்குப் புகட்டி நற்போதனைகளைச் செய்து, ஒவ்வொருவரும் தம்முடைய சரியையைக் கவனித்து, பிரதி வாரத்திலும் அவரவர் செய்த நன்மை தீமைகளை, நோட்டுப் புஸ்தகங்களில் குறித்து, மறுவாரத்தில் தீமைகளை வரவரக் குறைத்து நன்மைகளை அதிகரித்து வரும்படிக்கும், மதுரை பிரஹ்மக்ஞான ஸபை அங்கத்தினர்கள் சிறுவர்களிடத்துக் கருணை கூர்ந்து அவர்களுக்கு வெகுமதிகள் அநேகம் கொடுத்து உற்சாகப் படுத்தி ஞான முறையில் அவர்களைப் பயிற்றுவிக்கிறார்கள். இத்தகைய தர்மம் நந்தமிழ் நாட்டுப் பிரஹ்மக்ஞானக் கிளைச் சபை யொவ்வொன்றும் கைக்கொள்ளத் தக்கதாகும்.

மாதம் ஒன்றுக்கு 500 துண்டுப் பத்திரிகைகள் அச்சியற்றுவதற்கு ரூ. 7 செலவாகக் கூடியதாயிருக்கிறது. இதற்காக மூலதநம்

அவசியம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் 1 அணு ஸ்டாம்பு அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்புவார்களேயாகில், நம்பத்திரிகையின் 1200 சந்தாதார்களும் ஏகோபித்து இந்த டிராக்டுபண்டின் மூலதநத்தை வருஷம் 1 க்கு ரூ 75 வீதம் விருத்தி செய்விக்கும் பரம உபகாரத்தை யேற்றுக் கொண்டவர்களாவார்கள். நம்முடைய பத்திரிகையானது தன் சந்தாதார்களை யொரு பொதுநோக்கத்திற்கு உடன்படச் செய்யத்திறனுள்ளதா என்பதைப் பரீக்ஷித்தலுக்கும் ஏற்ற விண்ணப்பம் இது. ஸ்வர்ண மணிமாலைச் சங்கத்திற்கு அயலூர்களிலிருந்து கார்டுகள் அனுப்பியவர்கள் ஒவ்வொருவருக்கும் ½ அணு செலவழித்துத் துண்டுப் பத்திரிகை யனுப்ப இச்சங்கம் இப்போது சக்தியற்றதாகையால், இப்பத்திரிகையில் 'சிறுவர்க்குரிய விஷயம்' என்பதைப் படித்துத் தெரிந்து கொள்வார்களாக.

B. S. ராமசுப்பையர்.
பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

---

## நன்மொழி.

ஜலம் நிறைந்த ஓர் பாண்டத்தில் ஒரு பொட்டு எண்ணெயைச் சிந்தினோமானால் எவ்விதத்தினும் அது மேலேயே பாவி மிதக்கின்றது போல, பொய்யை ஒருவன் எவ்வளவு பொருந்தச் சொல்லினும், அது அமிழ்ந்து போய், உண்மையே கடைசியில் மிதந்து வெளியே காணப்படுகிறது. !உண்மையே ஜயம் பெறுகிறது. "ஸத்யமேவஜயதி நாந்ருதம்"

***

சுத்த ஸ்படிகம் போன்ற ஜலத்தை ஓர் வெள்ளைக் கண்ணாடி சீஸாவில் நிரப்பி வைத்திருந்தால், அறியாதவர்களுக்கு அது எப்படி வெறுமையான சீஸாவைப் போல் தோன்றுமோ, அதே மாதிரி ஸத்யமும் ஆழ்ந்தறியாது மேலளாவிப் பார்ப்பவர்களுக்குப் பொய்யாகவே தோன்றும்.

***

எளியவர்களுக்கு இனமாக வாங்கிய காடிதான், விலைகொடுத்துப் பெறக்கூடிய தேனைக் காட்டிலும் பன்மடங்கு ருசியாயிருக்கும்.

***

ஒவ்வொரு மரத்திற்கும் அதனுடைய நிழல் எப்படி கூடவே இருக்கிறதோ, அப்படியே துக்கம் ஒவ்வொன்றுக்கும் கூடவே ஸுகம் என்பதும் உளது.

245

# வருங்கால லக்ஷியங்கள்*

## மதம்.

மனிதன் பரமாத்மாவை அறியவும் அடையவும் மார்க்கத்தைத் தேடுவதும், தனக்குள் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவை அறியவும் அடையவும் நெடுங்காலம் பிரயத்தனப்பட்டு, ஆத்மபோதம் பெற்று ஸ்வாநுபவத்தால் ஸாக்ஷாத்கரித்த மஹாநுபாவர்கள் மூலமாய் அந்த மார்க்கம் இன்னதென்று வெளியிடப்படுவதுமே மதம் எனப்படும். ஏதாவது ஒரு ஜனங்களுக்குள் நூதனமாக ஒரு மதம் ஸ்தாபிக்கப்படுகிறபோது அந்த ஜனங்கள், விகாஸ முறையில் மிகவும் தாழ்ந்தபடியில் இருப்பார்களாகையால், மதஸ்தாபநாசாரியர்கள் இன்னதைச் செய்யுங்கள் இன்னதைச்செய்யாதீர்கள் என்று விதி நிஷேதங்களை மட்டிலும், அவர்களுக்கு நியமனம் செய்வார்களேயன்றி ஏனப்படிச செய்யவேண்டும், அல்லது ஏனப்படிச் செய்யக்கூடாது ஏன்பதற்குக் காரணங்களை அவர்களுக்குத் தெரிவிக்கிறதில்லை. தத்வங்களை மட்டிலும் அவர்களுக்குச் சொல்வார்களேயல்லாமல் அவைகளை நிரூபணம் செய்து காட்டுகிறதில்லை. எப்படி ஒரு பௌதிக சாஸ்திரியானவர் (Scientist) தான் பரிசீலனம் செய்து தெரிந்துகொண்ட ஸித்தாந்தங்களைத் தன்னுடைய மாணாக்கர்களுக்குச் சொன்னால் அவர்கள் அவைகளை உண்மை என நம்பிப் பிரவிர்த்திக்கிறார்களோ, அப்படியே அந்த ஜனங்களும் சிரத்தையுடன் உட்கொண்டு நம்பி அநுஷ்டிக்க வேண்டியதற்காக மதஸ்தாபகாசாரியர்களால், சில கோட்பாடுகள் நியமனம் செய்யப்படுகின்றன.

சாஸ்திர வித்தியாப்பியாஸ முறையில் எப்படியோ அப்படியே, மதஸ்தாபந முறையிலும் ஆரம்பத்தில் சில கோட்பாடுகளை சிஷ்யர்கள் நம்பிக் கட்டாயமாய் அங்கீகரிக்கும்படி செய்தால் மட்டிலும் அவர்கள் வேகமாய் அபிவிருத்தி யடைவது சாத்தியமாகும். ஏனென்றால் உபதேசம் செய்கிறவர்கள் பிரயாசைப்பட்டு ஸ்வாநுபவத்

* Herald of the Star (நக்ஷத்திர தூதன்) என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் 1914-௵ பிப்ரவரி ௴த்து சஞ்சிகைக்கு மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளால் எழுதப்பட்ட வியாசத்திலிருந்து தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

தால் சேகரித்த ஞானத்தின் பிரயோஜனத்தை சிஷ்யர்கள் சிரமமில்லாமல் அடைந்து விடுகிறார்கள். ஆகையால்தான், ' உபதேசிக்கப் படும் தத்வங்களின் உண்மை சிஷ்யர்களின் மனதிற்குப் புலப்பட்டாலும் புலப்படாவிட்டாலும், ஆரம்பத்தில் சிஷ்யர்கள் அவைகளைக் கட்டாயமாய் ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்படுகிறார்கள்.

ஆனால் சாஸ்திர வித்யாப்யாஸத்தில் தனக்குந்தானே பரிசீலனம்செய்து தெரிந்துகொள்ள மாணாக்கர்களுக்குச் சக்தியும் சாமர்த்தியமும் ஏற்பட்டவுடன், முந்தி விசாரிக்காமல், தான் ஒப்புக்கொண்ட தத்வங்களின் உண்மையைப் பரிசீலனம் செய்ய ஆரம்பிக்கிறான். அதை உபாத்தியாயர் தன்னிடத்தில் விசுவாசக்குறைவாகக் கொள்ளுவதில்லை. தன்னுடைய மாணாக்கன் ஸ்வயமாகத் தெரிந்துகொள்ள யோக்யதையில்லாமல் எந்நாளும் பிறர் சொல்வதையே குருட்டுத்தனமாய் நம்பிக்கொண்டிருக்கவேண்டுமென்று விரும்புகிறதில்லை. மதவிஷயத்திலேயோ அப்படியில்லை. சிஷ்யனுக்கு விவரந் தெரிந்து தன்னுடைய மதத்தில் உபதேசிக்கப்படும் தத்வங்களின் உண்மையைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தானேயானால், அவன் மதத்துரோகியென்று எண்ணப்படுகிறான். குழந்தைப் பருவத்தில் எப்படியோ, அப்படியே வயதிலும் அறிவிலும் முதிர்ந்த பின்னும், தத்வங்களின் உண்மையைப்பற்றித் தனக்கு நம்பிக்கை யில்லாவிட்டாலும், அவைகளை சத்தியமென்றே ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறான். ஆகையால் அவன் அந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்படச் சம்மதிக்காமல், மீறித் தன்னுடைய மனச்சாக்ஷி சொல்லுகிறபடி அபிப்பிராயங்கொள்ள ஸ்வாதந்திரியம் பாராட்டுகிறான்.

அறிவிலும் தர்மாதர்ம விவேகத்திலும், மனிதன் இளமைப் பருவத்தி லிருக்கும்போதுதான், மதங்களில் கொள்கைகள் நிர்ப்பந்தமாய் நியமனம் செய்யப்படுகின்றன. அந்தக் காலத்தில் தகப்பனுடைய மதத்தையே பிள்ளை ஏற்றுக்கொள்கிறான். அப்படியே பரம்பரையாய் வருகிறது. எப்படி ஒரு தேசத்தில் அல்லது ஒரு வகுப்பாரில் பிறந்தவர்களுக்குத் தலைமயிரின் நிறம் கண்ணின் நிறம் முதலானவை, ஒரே மாதிரியாய் ஏற்படுகிறதோ, அப்படியே மதமும்

பிறப்பின்படியே ஏற்பட்டுவிடுகிறது. பல மதங்களை ஆராய்ந்து தனக்குத் திருப்தியைக் கொடுக்கும் மதத்தை அவனவன் தேர்ந்தெடுப்பதென்கிற தில்லாமல், வழக்கத்தை ஒட்டியாவது, பரம்பரையை ஒட்டியாவது, சம்பிரதாயத்தை யொட்டியாவது மதம் ஏற்பட்டுவிடுகிறது.

மனிதன் மேன்மேலும் விகாஸத்தை யடைந்தவுடன், தன்னுடைய மதத்தில் உபதேசிக்கப்பட்ட தத்வங்களின் உண்மையைப் பற்றி விசாரிக்கத் தொடங்குகிறுன். தன்னுடைய முன்னோர்கள் அவைகளை உண்மையாகக் கொண்டிருந்தால், தானும் அவைகளை உண்மையாகக் கொள்ளவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கிறுன். குருட்டுத்தனமாய் நம்புவதைவிட்டு, தன்னுடைய புத்தியைக் கொண்டு ஆராய்ச்சி செய்யப்புகுகிறுன். இதுவரையில், தான் உண்மையென்று நம்பியிருந்த தத்வங்களைப் பரி[illegible]ம செய்து தன்னுடைய புத்திக்கும் மனச்சாக்ஷிக்கும் விரோதமின்றி இருப்பவைகளை மட்டிலும், ஏற்றுக்கொள்ளவேண்டியது தன்னுடைய கடமையென்று தீர்மானிக்கிறுன்.

இந்த ஸம்சய நிலையானது (Sceptical Stage) மனிதனுடைய மதஸம்பந்தமான ஏற்றத்தில் ஒரு படிபோலாகும். ஸஹஜமாய் ஒவ்வொருவரும் அந்தப்படியை யடைந்துதான் மேலே போகவேண்டியது. பூர்வாநுபவங்களின் பயனுனது இப்பால் வாஸனையாக அமைந்திருக்கும் நிலைமையில் அதற்கு மனச்சாக்ஷி என்று பெயர். எப்படித் தற்காப்பு (Self preservation) என்னும் ஸ்வபாவ குணமானது ஸ்தூல சரீரத்திற்கு அபாயம் நேரிடாமல் தடுக்கிறதோ, அதுபோல மனச்சாக்ஷி என்பது அநியாய வழியில் மனிதன் பிரவிர்த்திக்காமல் தடுக்கிறது. ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ததில் முந்திய அநுபவம் சுகமானதாயிருந்தால் அதே மாதிரி ஸந்தர்ப்பம் திரும்பவும் நேரும்போது, அதைச் செய்யவேண்டுமென்றும், முந்திய அனுபவம் துக்கமானதாயிருந்தால் அதைச் செய்யவேண்டாமென்றும் மனச்சாக்ஷி சொல்லுகிறது. முந்தியஅநுபவத்தில் வராத சந்தர்ப்பம் நேர்ந்தால் நம்முடைய மனச்சாக்ஷி ஒன்றும் சொல்லுகிறதில்லை.

இந்த ஸம்சய நிலையிலிருந்து மனிதன் இரண்டு வழியாக வெளியேறலாம். (1) தனக்கு ஏற்பட்ட ஸம்சயங்களை நிவர்த்தி செய்து கொள்ளச் சக்தியற்றவனாய், பிரமித்துப் போய் பழையபடி நம்பிக்கை நிலை (Dogmatic Stage) யையே யடைந்து விடுகிறான். (2) ஸ்தூல திருஷ்டிக்கு மேல்பட்டதாயுள்ள ஸூக்ஷ்ம திருஷ்டியைப் பயிற்சி செய்து தனக்கு உபதேசிக்கப்பட்ட தத்துவங்களின் உண்மையை ஸ்வயமாகவே பரிசீலனம் செய்து ஸம்சயம் தெளிந்து அவைகளில் ஸத்தியமாகவும் நித்தியமாகவும் உள்ளவைகளை மட்டிலும் ஏற்றுக் கொள்கிறான். இவ்விதமாக மேன்மேலும் விகாஸத்தை யடைந்து ஸூக்ஷ்ம லோக விஷயங்களை ஸ்வாநுபவத்தால் நேரிலறிந்து ஞானியாகிறான். பௌதிக சாஸ்திரத்தின் உண்மையை ஸ்வயமாகப் பரிசீலனம் செய்தவர்கள் எவ்வளவு நிச்சயமான ஞானத்தைப் பெறுகிறார்களோ அவ்வளவு நிச்சயமான ஞானத்தை ஸ்வாநுபவமடைந்த ஞானிகளும் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட அநேக ஸூக்ஷ்ம தரிசிகளுடைய பிரத்தியக்ஷாநுபவங்களின் ஒற்றுமையால் தத்வங்களில் நிச்சய புத்தி யதிகரிக்கிறது.

இதுதான் சமீபத்தில் வரும் காலத்தில் மதவிஷயமான லக்ஷ்யமாகும் என்று நம்புகிறேன். பரம்பரையாக வரும் நம்பிக்கைகள் போய் ஸ்வாநுபவத்தால் உண்டாகும் ஞானம் நிலை பெறும். ஆசார்யர்கள், கிரந்தங்கள், முதலான பாஹ்யப் பிரமாணங்களைக் காட்டிலும் தன்னுடைய உள்ளத்தின் கொள்கைக்கே மதிப்பு ஏற்படும். புதை மணல் போன்ற கேவல நம்பிக்கை போய், பாறை போன்ற ஸ்வாநுபவம் அடிப்படையாக அமையும், ஸ்தூல லோகத்தில் பௌதிக சாஸ்திர ஞானம் மேன்மேலும் அபிவிருத்தியடைய வேண்டுமானால், எப்படிச் சலிக்காத பொறுமையும், இடைவிடாத முயற்சியும், உறுதியான பிடிவாதமும், அபஜயத்தால் மனந்தளராமையும் அவசியமோ அப்படியே, ஆத்ம ஞானம் விருத்தி யடைய வேண்டுமானாலும் அவைகளவசியமே. எதை யறிந்தால் மற்றதெல்லாம் அறிந்ததாக ஆய்விடுமோ அப்படிப்பட்ட நித்தியமான பரம்பொருளை அறிய வேண்டுமானால் எத்தனை பாடுபட வேண்டியதானாலும் பெரிதல்ல.

ஸம்சய நிலையிலுள்ள சிலர்கள், இரும்பவும் நம்பிக்கை நிலைக்குப் போக வேண்டிய அவ்வளவு பலக்குறைவு இல்லாமலும், ஸ்வாநுபவ நிலையை யடையவேண்டிய, அவ்வளவு பலமில்லாமலும், ஸம்சய நிலையிலேயே யிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், தேவர்கள், ஈசுவரன், ஸ்வர்க்கம், நரகம், முதலானவைகளில் ஆஸ்திக புத்தியில்லாவிட்டாலும் நல் வாழ்க்கைக்கு நல்லொழுக்கம் மிகவும் அவசியம் என்ற நம்பிக்கையுடன் நன்னெறி வழுவாது நடப்பவர்களாயிருப்பார்கள். அவர்கள் சார்ல்ஸ் பிராட்லா (Charles Bradlaugh) வில்லியம் கிங்டன் கிளிப்போர்ட் (William Kingdon Clifford) முதலானவர்களைப் போல ஜீவனுடைய நித்தியத்வத்தில் நம்பிக்கையற்றவர்களா யிருந்தாலும் பரோபகாரத்தைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் வேறில்லை என்று நன்குணர்ந்தவர்களா யிருப்பார்கள். அப்படிப்பட்ட சிலாக்கியமான ஸம்சய வாதிகளை சிறந்த ஸ்வாநுபவிகளுக்கு, அடுத்தபடியாகச் சொல்லலாம், அவர்கள் இந்த ஜன்மத்தில், வருங்கால மதமாகிய கோவிலுக்குள் பிரவேசிக்காமல் வெளியே யிருந்தாலும் வாசற்படிக்கு சமீபத்தில் இருப்பார்கள். அடுத்த பிறப்பில் வாசற்படியைத் தாண்டி உள் சென்று பரமனைத் தெரிந்து கொள்வார்கள்.

249

## நன்மொழி.

வயல்களில் களைகள் பயிர்களை நெருக்கிவிடாதபடி அவைகளை நாம் எப்படிக் களைகின்றோமோ, அப்படியே மநுஷ்யனிடத்தில் காமனைகள் குடிகொண்டு வளர்ந்து ஆத்மாவின் நிஜஸ்வரூபத்தை மறைத்து விடாதபடி காமனைகளை அறுக்கவேண்டும்

---

இஹலோகத்தில் நீதிமார்க்கத்தைக் கடைப்பிடித்து சந்தோஷிப்பவனுக்கு லோகாந்தர வாழ்க்கை இதினும் பன்மடங்கு அதிகமான சந்தோஷமாயிருக்கும்.

---

செய்யவேண்டியதைச் செய்யா தொழிதலாலும், செய்யத் தகாததைச் செய்வதினாலும் அறிவிலிகள் பாபத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள்.

250

## காலமும் கன்மமும்.

அகில சராசரங்களாகிய சர்வஜீவ பேதங்களினது உள்ளும் புறமும் ஓதப்புரோதமாய்க் கலந்து நிற்கும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளின் கருணை கடாக்ஷ வீக்ஷண்யத்தினால் உலக விகாசத்திற்கு உழைத்து வரும் வெள்ளியம்பலத்தவர் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்" கணங்களென்றும், அன்னார் உலகவிகாசங்களை நோக்கி அவ்வக்காலங்களுக்குத் தக்கவாறு ச்ருதி, ஸ்ம்ருதி, இதிகாஸ புராணாதிகளாகிய சட்டதிட்டங்களைச் செய்தருளுகின்றன ரென்றும், புவனப்போக்கைப் பொறுமையுட னாராய்ந்தறிவார் புகல்கின்றனர்.

இப்போது காணப்படுகிற வேதாகம இதிகாஸ புராண தர்ம சாஸ்திரங்களே, உண்டாகி ஒடுங்கும்வரை உலக நடைக்கேற்பட்ட சட்டங்களென்று நினைத்து, உண்மை விஷயங்களை உய்த்துணராது, வைதிகரென்ற பெயராதி வேடங்களாற் சிறந்த பெரியார், சாஸ்திரங்களுக்கும், ஜனசமூக ஒழுக்கங்களுக்கும், எவ்வளவோ அஜகஜாந்தமான வித்யாசங்களுண்டாய் விட்டன வென்றும், முன்னோர்ஒழுக்க வழக்கங்களுக்கு ஒருபொழுதும் மாறுபடலாகா தென்றும், காலங்கெட்டுவிட்ட தென்றும், அரசாக்ஷி அநீதமுடைய தென்றும், அந்தணர்களின் சந்தியா வந்தன மொன்றேயன்றி, அக்நி ஹோத்ர, ஔபாஸன, வேதாத்யயன, யக்ஞ, யாகாதி நைமித்திய கன்மங்களழிந்து விட்டனவென்றும், கண்ணை மூடிக்கொண்டு கத்துகிறார்களே தவிர, இவர் கூறும் விஷயங்களின் தத்வார்த்தங்களுக்கும் இவர்க்கும் வெகுதூரம்.

காலத்திற் கேற்ற ஒழுக்க வழக்கங்களைக் கழறுவது நூலேயன்றி, நூலுக்கேற்ற தன்று காலமென்பதை, "எதுவும் காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்தது" "காலத்திற்கேற்ற கோலம்" எனத்தற்போது வழங்கி வருகிற பழமொழிகளாலும் உலக வியாபாரங்களின் அற்ப அநுபவத்தாலும் நன்குணர்வோம். இவ்வுலகம் தோன்றியக்காற் றொட்டு இதுகாறும் எத்தனையோ அளவிறந்த மாறுபாடுகளையும், அவைகளுக்கேற்ற ஒழுக்க வழக்கங்களையும் அவற்று

லாய சட்டதிட்டங்களையும் பெற்றிருக்கிறதென்ற சித்தாந்தம் கரத லாமலகம்போல் பெறப்படுகின்றது.

தாம் செய்யும் தொழில் இன்னது, அதனால் வரும் பிரயோஜனம் இது, அந்தப் பிரயோஜனம் தமக்கா? அல்லது உலகத்திற்கா? தமக்கென்று செய்யுங் கருமத்தால் வருவது எது? உலகத்திற்கென்று செய்வதால் வருவது யாது? என்பதின் பொருளை யுணராது முன்னோர் வழக்கத்திற்கு முரண்படலாகாதென ஆயுள்நாளுள்ள மட்டு முழைத்துவருங் கருமத்தால் "மறைபட்டிருக்கும் புதையலோடு கூடிய பூமியின்பேரில் மனிதர்கள் எத்தனை தடவை நடந்தபோதிலும் அதை எப்படி அடையமாட்டார்களோ அப்படியே" எவரும் யாதொரு பயனையும் பெறார்.

வைதிக கன்மங்களி னுட்பொருளை அறிந்தனுஷ்டிப்பவர் ஆயிரத்தி லிரண்டு மூன்று பெயரும் அகப்படார்க ளென்பதையும், மானஸிக மற்ற, காயிக, வாசிகங்களான பாஹ்பாதி தந்திரங்களோடு வேதாநு வசனங்களையும், ஸ்ம்ருதி வாக்கியங்களையும், குருட்டுப் பாடம் பண்ணிக்கொண்டு, விருதாக்கோஷ்டியர் மெச்சும்படி பேசுபவர், கணக்கற்றோர் காணப்படுவா ரென்பதையும், நமது ஸ்வாநுபவத்தாலும் "சொல்லுதல் யார்க்குமெளிய வரியவாஞ், சொல்லிய வண்ணஞ் செயல்" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் வாக்காலுந் தெரிகிறோம். கிழட்டுப்புலி பசுவின் றோலைப் போர்த்திக் கொண்டு மேய்வதாகப் பாவனைகாட்டி தன்னருகே வரும் மிருகங்களை அடித்துப் புசிப்பதுபோல, வேஷத்தால் வேதவித்தென்று நினைத்து, வருவோரிடம் வஞ்சித்துப் பொருள் கவர்தல், எத்தகைய தீய கதிகளைத் தருமென்பதையும், வைதிகத்திற்கு மாநஸிகமான பகவத் தியானுதிகள் முக்கியமே யன்றி, நிஷ்பிரயோஜன மாகிய வெளி வேஷங்கள் முக்கியமாகமாட்டா வென்பதையும் பகுத்தறிவுடையார் ஆராய்ந்து பார்க்கக் கடவர்.

முற்காலத்தைக் காட்டிலுந் தற்காலம், அளவற்ற நாடு நகரங்களோடும் ஏராளமான, தென்னை, பனை, கமுகாதி விருக்ஷங்களாகிய தோப்புக்களோடும், வாழை, மா, பலா மாதுளை, கொய்யா, ஆரஞ்சு, பேரி முதலிய இனிமையிலும், இலக்ஷணத்திலுஞ் சிறந்த நவநவ

மான காய் கனிகளைத் தாநின்ற மாஞ்செடிகளோடு கூடிய தோட்டங்களோடும், இவைகளைப்பயிரிட்டுப் பலனைப் பல்லோர்க்கு முதவித் தாமும் அநுபவிக்கிற விவசாயிகளோடும் சுபிக்ஷமான இடங்களிலும், விளைவற்ற இடங்களிலும், தான்யாதிகள் ஓரே விலைக்கு விற்கும்படி கொண்டு கொடுத்துச் சமஞ்செய்து வரும் வியாபாரிகளோடும், வேதாகம இதிகாஸ புராணாதிகளையும், நிகழ்காலத்திற்கேற்பப் பாரபக்ஷமில்லாததும், சார்வஜன சம்மதமானதும், படித்துணர்ந்து நடப்பவர்களை விகாஸப்படுத்தும் திறனுடையதுமான வெள்ளியம்பலத்து வித்தகச்சித்தர் கணங்களாகிய மநு, பராசர, வேதவ்யாஸ, மாதாநுபங்கியாதி மஹருஷிகளாற் செய்யப்பட்ட தர்மசாஸ்திரங்களையும் மேற்சொன்ன ஸ்ருதி, ஸ்ம்ருதிகளிற் றற்கால அநுஷ்டானத்திவில்லாததும், வருங்காலத்திற்கு வேண்டாததுமான பலவற்றையொழித்து, எதிர்காலத்திற் கின்றியமையாத சிலவற்றோடு தமது ஸ்வாநுபூதியிலுதித்த சர்வசமய சமரச சன்மார்க்கங்களையுந் திரட்டியருளிய, உபர்வறவுயர்ந்த விவேகிகளின் குப்தவித்தை (Secret Doctrine), மனோசக்தி (Thought Power) முதலிய அரிய பெரிய நிர்விகற்ப நீதிநூல்களையும் அச்சிட்டு, யாவருக்கும் பயன்படுமாறு வெளிப்படுத்தியும், விவிதபேதங்களை யுடையதும் பிரத்தியக்ஷாநுபவமுள்ளதுமான, ரஸாயண யந்திர சக்தி ஈறுயுள்ள நூற்கடலைக் கரைகண்டும் விளங்குகிற அறிவாளர்களோடும், பொதுநிலை தவறாத நீதிசாஸ்திரங்களைப் பகுத்தறிந்து, இருதலையுங் கோணாது நிலை நிறுத்தும் நியாயாதிபதிகளோடும், நிதி நிலையங்களுக்கும், கைத்தொழிற் சாலைகளுக்கும், கப்பற் கூட்டங்களுக்கும், இரயில்வே கம்பெனிகளுக்கு மதிபதிகளான செல்வவான்களோடும், அக்ஷரகுக்ஷிகளாய் விளங்குகிற ஆண் பெண்களோடும், தேச தேசாந்தர சராசரப் பொருள்களை வரிசை வரிசையாய்ப் பெற்ற காக்ஷிமன்றுகளோடும், மனித, திரியக்காகிய வடிவ சத்தங்களை, அபேதமாய் விளக்கும் அற்புத யந்திரங்களோடும், பூத, தூரதிருஷ்டி முதலிய கணக்கற்ற கருவிகளோடும், மற்றும் இவை போன்ற சங்கோப சங்கங்களான சுபசாதனங்களோடும், இவைகளனைத்திற்கும் ஆதார பூதரான ஆத்ம ஞானிகளோடும் பிரகாசிக்கிற இக்காலம் எவ்வாறு கெட்டதாகும்? இதுவே, சாதி சமயச்சழக்கொழிந்து சமரஸம் பெறுமாறு "ஒன்

றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின் நமனில்லை நாணுமே, சென்றே புகும் கதியில்லை, நும்சித்தத்து, நின்றே நிலை பெற நீர் நினைந்து உய்மினே." என நம் திருமூலநாயனார் கூறிய வாக்கியம் சிறக்கும் காலம்.

ஆதிகாலத்தில் ஸிம்ஹசார்த்துலாதி பற்பலகொடிய மிருகங்களடர்ந்ததும், ஓரிடத்தார் மற்றோரிடத்திற்குச் செல்ல நிர்ப்பயமான மார்க்கங்களில்லாததும், ஜீவனத்திற்குப் பெரும்பான்மையும் கொலைத்தொழிலோடு கூடிய வழிப்பறியை ஒழிப்பரிய வழக்கமாகக் கொண்ட வேடுவர்களைத் தன்னிடத் தடக்கியதுமாகிய, காடுகளை வெட்டிக் களைந்து கோடிக் கணக்கான ரஸ்தாக்களையும், "ரயில்மார்க்கங்களையும், தந்தி லயன்களையு முண்டுபண்ணி, நாடுநகரங்களைச் சீர்திருத்தி, கல்விக் கழகங்களைப் பெருக்கி, வேண்டுவோர் வேண்டியபடி விளைநிலங்களைக் கணக்கிட்டுத் தந்து, அவற்றிற் கின்றியமையாத ஆறு குளங்களை வெட்டி, அவைகளின் பிரவாகங்களை அடக்கியாளுதற்கு யந்திரக் கதவுகளியற்றிக் கொடுத்ததோடு, சமுத்திரயானத்திற்குப் போதிய சாதனங்களையும் செய்து, இக்கணக்கற்ற மார்க்கங்களுக்கும் காவற் சங்கம் (Police), மாரமத்துக் கூட்டம் (Local Fund and D. P. W.) அளந்தற் கணிதம் (Survey) சுகாதாரம் (Sanitation) முதலிய அதிகாரப் பிரிவுகளையும் (Department) அவற்றிற்குப் படிப்படியா யுயர்ந்த பற்பல உத்தியோகஸ்தர்களையு மேற்படுத்தி, அளவிற் சுருங்கியதும், எழுதப் பேச இனியதும், இருபத்தா றெழுத்துக்களாலாயதும், இங்கிலீஷ் என்ற பெயருடையதுமான ஓரே பாஷையினாலும், அதி உன்னத நாகரீக ஒழுக்க வழக்கங்களாலும், இன்னும் அநேக அநேக ஆபுதங்களான அரிய பெரிய விஷயங்களாலும், நமதிந்தியாவை "எந்த வேளையினும் நொந்தவர் துயர் கேட்டு இடர் இழைப்பவன் தனது ஏகமைந்தனேயெனினும் வதைத்திட ஒல்கான் மாக்களின் சுகம் நலம் அன்றி, சிந்தனை மற்றோர் பொருளினிற் செலுத்தான். தீ மொழி கனவிலும் புகலான், தந்தை போல் தாய்போல் எவரையும் ஓம்பும் தன்மையனே இறை அன்றோ" என்ற நீதியின் சிரோரத்தனமாகி, ஒழியாவூக்கத்தோடு ஒரு கோலோச்சும் ஆங்கிலத்துரைத் தனத்தாரது அரசாட்சி, அநீதமாகுமா?

இருபிறப்பாளர்க்கு "வேதாத்யயநேந ப்ராஹ்மணா" என்றபடி, வேதாத்யயனுதியே பிராஹ்மண்யத்தையுண்டு பண்ணுவதாயிருந்தாலும், வேத வாக்யமானது "(ஸ்தாணுரயம் பாரஹார: கிலாபூத் அதீத்ய வேதம் ந விஜாநாதி யோ(அ)ர்த்தம்) ஒருவன் வேதங்களை அர்த்தக்ஞான மில்லாமல் அதற்குரிய அக்ஷரங்களைச் சப்தலோபமின்றி அத்யயனஞ் செய்தாலும் அவனுக்கவ்வேதங்கள் சுமையேயல்லது எவ்விதப் பிரயோஜனத்தையுந் தராது" என்று சொல்லுகிறது, இதுவேயுமன்றி தக்ஷவாக்யமோ "வேதஸ்வீகரணம் பூர்வம் விசாரோ(அ)ப்யஸநம் ஜப:। தத்தாநஞ்சைவ சிஷ்யேப்யோ வேதாப்யாஸோ ஹி பஞ்சதா॥) ஓதல், அர்த்தமறிதல், ஆவர்த்தி செய்தல், ஜபித்தல்; தான் அப்பியஸித்ததைப் பிறர்க்குபதேசித்தல் ஆகிய இவ்வைந்தும் அடங்கியது வேதாப்பியாஸம் என்று கூறுகின்றது, இத்தகைய செயல்கள் சிறிதுமின்றி, மொந்தை யுருப்போடுவதால் ஒருவனொருபோதும் பிராஹ்மணனாகான்.

ஜீவகாருண்யமற்றதும், ஸ்வப்ரயோஜன மற்றதுமான யாக, யக்ஞாதி விஷயங்கள் முற்காலத்திற்கு ஒருவாறு வேண்டி யிருந்திருக்கலாமே தவிர, தற்காலத்தவரால் ஒரு போதும் வேண்டற்பாலனவன்று, மநுவாக்கியமும் "(விதித்ருஷ்டம் து யத்கர்ம க்ரியதே விதிவர்ஜித:। ந தத்பலம் அவாப்நோதி க்லேசமாத்ரம் து தஸ்ய தத்) சாஸ்திராதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் காலாதி நிர்ணயங்களைக் கடந்து செய்யப்படும் கருமங்கள், செய்யப்படாதவைகளுக்குச் சமானம்" என்று கூறுவதால் ஸந்தியா வந்தனங்களை, தந்தி, காற்று, மனமாதி வேகங்களிற் செலுத்தாமலும், காலாதீதப்படாமலும், காயிக வாசிக மட்டாற் கருதாமலும், மாநஸிகத்தின்பாற் படுத்தி வருவோமாயின், ஈது அந்தண வொழுக்கத்திற்கு அச்சாணியாகும். இவ்வாறு ஒருவன் அநுஷ்டித்து வந்தால் அவன் இதர கன்மங்களை விட்டவனேயாயினும் ஈசுவரனால் இரக்ஷிக்கப்படுவான். பொதுவாய் ஜனங்களுக்கு அஹிம்ஸை, சத்ய வசனம், திருடாதிருத்தல், சித்த சுத்தி, இந்திரியங்களைச் சரியான வழிகளிற் செலுத்தல், பரோபகாரம், அந்தக் கரணவொருமை, தயை, பொறுமையாகிய இவைகளே சர்வ சாஸ்திர ஸம்மதமான கன்மம். ஓம் தத் ஸத்.

ஆத்தங்குடி T. R. M. M. சுப்பராம ஐயர்.

# அவதாரங்கள்.

(197-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம்முடைய சூரியன் ஈசுவரனுடைய ஸ்தூல தேகமாயிருந்தாலும், அதுமாதிரி அநேக சூரியன்களுண்டு. ஆகாசத்தை நாம் பார்க்கும் பக்ஷத்தில், ஆயிரக்கணக்கான எண்ணிறந்த நக்ஷத்ரங்கள் காணப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியன். அதைச்சுற்றி அநேக க்ரஹமண்டலங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. நம்முடைய சூரியன் நமக்குப் பெரிதாகத் தோன்றினாலும் அது மற்றொரு பெரிய நக்ஷத்ர மண்டலத்தினுள்ள ஓர் க்ரஹமண்டலமே. அதேமாதிரி, அப்படிப்பட்ட பெரிய நக்ஷத்ரமண்டலமே அதைக் காட்டிலும் பெரிய மற்றொரு நக்ஷத்ர மண்டலத்திலுள்ள ஓர் க்ரஹமண்டலமே. இந்த மாதிரி அநந்தமாகப்போய்க் கொண்டேயிருக்கிறது. இந்த சங்கிலியானது எவ்வளவு தூரம் கோவையாகப் போய்க்கொண்டிருக்கும் என்பது நமக்குத் தெரியவராது, ஜகத்தை இவ்வளவு என்று யாரால் அளக்கமுடியும்! அநந்தமென்றே நாம் சொல்லலாம், அதற்கு முடிவும் எல்லையுங் கிடையா.

இதேமாதிரி, மண்டலங்களுக்குள், ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் பெரியது என்று சொல்லும்படி வித்தியாஸமிருப்பது போலவே, அவைகள் ஒவ்வொன்றிலும் விளங்குகின்ற ஜீவன்களிலும் வித்தியாஸமுண்டு. நம்முடைய ப்ரஹ்மாண்டமாகிய சூரிய மண்டலத்துக்கு ஈசுவரன் ஒருவர் இருப்பது மாதிரியே, அவருக்கும் மேற்பட்ட மஹேசுவரன் என்று மற்றொருவருண்டு. நம்முடைய சூரிய மண்டலத்திலுள்ள க்ரஹமண்டலங்களுக்கு அதிபதிகளாயுள்ள க்ரஹ தேவதைகளுக்கும் (Planetary Spirits) நம்முடைய சூரியமண்டலமுழுவதுக்கும் அதிபதியான (The Solar Logos) ஈசுவரனுக்கும் எப்படிப்பட்ட ஸம்பந்தமோ, அப்படிப்பட்ட ஸம்பந்தம்தான் நம்முடைய சூரியமண்டலத்திற்கு அதிபதியாயுள்ள ஈசுவரனுக்கும் நம்முடைய சூரியமண்டலமும் அதைப்போன்ற வேறு சூரிய மண்டலங்களும் எந்த மற்றொருபெரிய நக்ஷத்ர மண்டலத்திற்கு க்ரஹமண்டலங்களாயிருக்கின்றனவோ, அந்தப் பெரிய நக்ஷத்ர மண்டலத்திற்கு அதிபதியாயிருக்கின்ற மஹேசுவரனுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாதிரி சங்கிலியானது மேன்மேலும் போய்க்கொண்டேயிருக்கிறது. ஆகையினால் ஜகத்தில் எவ்வளவு சூரிய மண்டலங்கள் எவ்வளவு நக்ஷத்ர மண்டலங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு ஈசுவரர்களும் அவ்வளவு மஹேசுவரர்களும் இருக்கிறார்கள். ஆகையினால் எப்படி சூரிய மண்டலங்களும் நக்ஷத்ர மண்டலங்களும் அநந்தமோ, அதேமாதிரி ஈசுவரர்களும் மஹேசுவரர்களும் அநந்தம். இப்படி மேலேஎண்ணிக்கொண்டு போகப்போக, புத்திக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறதேயொழிய, ப்ரக்ஞையானது நிதானித்து நிற்கும்படியாய் எல்லையாதொன்றும் ஏற்படுவதில்லை. பகவானுடைய மஹிமையை (Divine Glory) மேன்மேலும் பார்ப்பதற்கு சக்தியற்றவர்களாயிருக்கின்றோம். நம்முடைய அற்ப ப்ரக்ஞையானது தடுமாற்றத்தை அடைகின்றது. அர்ஜுனன் பகவானுடைய விசுவரூபத்தைப்பார்த்துவிட்டு, அதிக நாழிகை அதைப் பார்க்க சக்தியற்றவனாய், தடுமாற்றத்தை அடைந்த காலத்தில், பகவானுடைய ஸாதாரண ரூபத்தைக்காட்டும்படி அவரை அவன் பிரார்த்தித்துக் கொண்ட மாதிரியே நம்முடைய ப்ரக்ஞையும் மேலே பார்க்கப் பார்க்கத் தடுமாற்றத்தையும் மயக்கத்தையு மடைகின்றது, நம்முடைய பிரக்ஞையால் எட்டமுடியாத பகவானுடைய அபாரமான மஹிமைகளைப் பார்ப்பதற்கு நாம் இன்னும் தயாராயில்லை. அவைகளால் நம்முடைய ப்ரக்ஞை தடுமாற்றத்தையும் மயக்கத்தையும் குழப்பத்தையு மடைகிறதே யொழிய, விசாலத்தையும் தெளிவையு மடைவதில்லை.

ஆகையினால் நாம் ஏதாவது கற்றுக்கொள்ள விரும்பினால், நம்முடைய ப்ரஞ்ஞை செல்வதற்கு ஓர் விதமான எல்லையை வைத்துக்கொள்ள வேண்டும். அநேக மனிதர்கள் பரப்ரஹ்மத்தைப் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு. பரப்ரஹ்மத்தை அளந்து, அவர்களுடைய கேள்விகளுக்குப்பதில் சொன்னாலொழிய அவர்கள் திருப்தியை யடையமாட்டார்கள். எவ்வளவுக்கெவ்வளவு மனிதன் அறிவிலியாயிருக்கிறானோ, அவ்வளவுக் கவ்வளவுதான் அதிகமாய் க்ரஹிக்கக்கூடும் என்று தன்னைப்பற்றியே எண்ணிக்கொள்ளுகிறான். அநேகாயிரம் ஜன்மங்கள் கழித்து நாம் யோசிக்கவேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையும் இப்பொழுதே கேட்க விரும்புகின்றான், இந்த

பூமியின் ஓர் பாகங்கூட நன்ருய் அறியாதவன், ஸரியாய் க்ரஹிக்கச் சக்தியில்லாதவன், எல்லாவற்றிற்கும் மூலகாரணமான வஸ்துவைக் குறித்துக் கேள்விகள் கேட்பதற்குத் துணிகின்ருன். ஆகையினுல் அப்படிப்பட்ட மனிதனுல் பொழுதுபோக்கிற்காகக் கேட்கப்பட்ட கேள்விகளை நாம் லக்ஷியஞ் செய்யவேண்டாம். நாம் இப்பொழுது இருக்கிற ஸ்திதியில், இது மாத்திரம் தெரிந்தால் போதும். அதாவது, நாம் தொழுகின்ற திரிமூர்த்திகள் நம்முடைய சூரியமண்டலத்திற்கு அதிபதிகள். அவர்களுக்கும் மேற்பட்டு அநேக மஹேசுவரர்கள் இருக்கின்ருர்கள். லக்ஷக்கணக்கான கல்பங்களுக்குப் பிறகு, நாம் அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆரம்பிப்போம்.

நம்முடைய ப்ர்ஹ்மாண்டமாகிய சூரியமண்டலத்தைப் பற்றின வ்யவஹாரத்தையே நாம் பேசுவோம். நமது சூரிய மண்டலத்தையே நாம் எல்லையாக வைத்துக்கொண்டு பேசுவோம். அதற்கு வெளிச்சத்தைக் கொடுக்கின்ற பகவானுடைய மஹிமையில் ஏகதேசம் ஏதாவது ஓர் கிரணத்தின் வெளிச்சத்தை நமது ப்ரக்ஞைபானது எட்டக்கூடுமானுல் அதுவே போதுமானது. அதைக்கொண்டு இந்த ஸ்திதியிலிருக்கிற வரையில் நாம் திருப்தியடைவோம். விஷ்ணு என்பவருக்கு பிரத்யேகமான சில சில கடமைகளும் தொழில்களுமுண்டு. இதேமாதிரி, ப்ரஹ்மாவுக்கும் மஹாதேவருக்கும் சில சில கடமைகளும் தொழில்களுமுண்டு. இந்த ப்ரஹ்மாண்டத்தில் முதல் காரியமானது ப்ரஹ்மாவால் செய்யப்படுகிறது. ஸ்ருஷ்டியானது அவரால் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது பிரகிருதியில் தன்னுடைய சக்தியை அநுப்ரவேசிக்கும் படியாகச் செய்து, ஒன்ருகவும் ஏகரூபமாகவு மிருந்த பிரகிருதியை அநேகமாகச் செய்தார். பிரகிருதியை ஏழு மாறுதல்களாகச் செய்தார். ஏழு தத்வங்களாகப் பிரித்தார். அதுதான் அவருடைய வேலை, ப்ரஹ்மாவால் தயார் பண்ணப்பட்ட ஸாமக்கிரிகளைக்கொண்டு, அவைகளில் விஷ்ணுவானவர் தன்னுடைய சக்தியை அநுப்ரவேசிக்கும்படியாகச் செய்து, ஜீவகோடிகளுடைய கர்மத்திற்கும் ஸ்வபாவத்திற்குந் தகுந்தபடி லோகங்களாகவும் தேசங்களாகவுங் கட்டினுர். இவருடைய சக்தியால் தான் லோகங்களும் தேசங்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. பிராண ரூபமாயிருந்து தனித்தனி

யான தேகங்களையும், உயிர் வடிவமாயிருந்து லோகங்களையும் தரிக்கின்றார். எல்லாவற்றையும் அவருடைய சக்திதான் சேர்த்துப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறது. அதனால் தான் அவருக்கு விஷ்ணு என்ற பெயர் வந்தது. எந்த உபாதியும் அவரில்லாமலிருக்க முடியாது. ஒவ்வொரு உபாதியிலும் ஜீவபூதமாயிருந்து அதைத் தரித்துக்கொண்டிருக்கிறார். அவர் எங்கேயும் வ்யாபித்திருக்கிறார். லோகத்தை ரக்ஷிக்கிறவர் என்றும் அவருக்குப் பெயருண்டு.

மஹாதேவருக்கு ப்ரஹ்மாண்டத்தில் வேறு கடமையுண்டு. அவருடைய தொழிலே வேறு. அவருக்கு மஹாயோகியென்று பெயர். ஞானதாதா வென்றும் மஹா குருவென்றும் ஆதி குருவென்றும் அவருக்குப் பெயர். ஜகத்குருவென்றும் பெயர். அவர் குருவாகவும், பார்வதியானவள் அவரிடத்தில் உபதேசம் பெறுவதற்குப் போனதாகவும், ஸத்குருவினுடைய ஸ்வபாவம் எப்படியிருக்குமென்று அவள் அவரைக் கேட்டதாகவும் குருகீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. பூமியிலுள்ள ஒவ்வொரு ஸத்குருவும் மஹாதேவருடைய அம்சமே, அவர் மஹா யோகியென்றும் எப்பொழுதுந் தபஸ்வி வேஷந்தரித்து யோகத்திலும் தபஸிலும் மூழ்கியிருக்கிறவர் என்றும் அவரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் அவருடைய தொழிலாகத் தெரிகிறது. மேலும், உபாதிகளையும் லோகங்களையும், ஜீவகோடிகளுக்கு அவைகளால் ஏற்படக்கூடிய காரியம் முடிந்தவுடன், ஸம்ஹரித்து, பிரகிருதியை பழையஸ்தானத்திற்கு ஏகரூபமான ஸ்திதியில் கொண்டுபோய்ச் சேர்க்கிறார். இதுவும் அவருடைய வேலைதான்.

ஆனால் அவர் அவதாரம் பண்ணுகிறதில்லை. லோகங்களில் எவர் உயிர் வடிவமாயிருந்து லோகங்களையுந் தேசங்களையுந் தரித்து பாலநம் பண்ணுகிறாரோ, அவர்தான் எப்பொழுதும் அவதாரம் பண்ணுவது வழக்கம். ஆகையினால் தான் எல்லா அவதாரங்களும் விஷ்ணுவிடத்திலிருந்தே உண்டாகின்றன. ஏனென்றால் அவர் தான் அபார கிருபையாலும் கருணையாலும், அன்பாலும் ஒவ்வொரு உபாதியிலும் வாஸம் பண்ணுகிறார். ஸகல ஜீவகோடிகளும் உத்தமகதியை யடையவேண்டுமென்றே அபார கிருபையால், ஏதாலும் அசைக்கப்படாமலும் கலக்கத்தை யடையாமலும், ஒவ்

வொரு உபாதியிலுமிருந்துகொண்டு, ஜீவகோடிகளுக்காக தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்கிறார். ஒவ்வொரு உபாதியிலும் வஸிக்கிறவர். அன்புமயமானவர். இதை நாம் நன்றாய் க்ரஹிக்கும் பக்ஷத்தில், எல்லா அவதாரங்களும் விஷ்ணுவிடத்திலிருந்து உண்டாவதற்குக் காரணம் தெரியவரும். ஸகல ஜீவகோடிகளும் உஜ்ஜீவிக்கும் பொருட்டும், கடைசியில் அவர்கள் பகவானுடைய பூர்ணமான ஸ்திதியை யடையும் பொருட்டும் பந்தத்திலிருந்து விலகி முக்தியை யடையும் பொருட்டும், ப்ரபஞ்சத்தினுடைய வ்யவஹாரதசையில், எவர் தன்னைத்தானே கட்டுப்பத்திக்கொண்டாரோ, புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற யக்ஞத்தைப் பண்ணினாரோ (The great Sacrifiice) அவரைத்தவிர யார், ஜீவகோடிகளுடைய கஷ்ட காலங்களில், அபாரகருணை வைத்து, கைதூக்கிவிட முடியும்? ஸகல ஜீவகோடிகளும் வீட்டை (முக்தி) யடைவதற்காக அவர் தன்னையே தானே கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆகையினாலே, பிரபஞ்சத்தில் ஏதாவது மாறுதல்கள் நடக்கவேண்டிய ஸமயங்களிலும், ஜீவகோடிகளின் நன்மைக்காக ஏதாவது சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டிய காலங்களிலும், அவரைத் தவிர வேறு யார் வரமுடியும்?

இந்த ப்ரஹ்மாண்டமாகிய ஸூர்ய மண்டலத்திற்கு அதிபதிகளாகிய திரிமூர்த்திகள் ஆவிர்ப் பாவமானதும், அவர்களிடத்திலிருந்து எழுபேர்கள் வெளிப்படுகிறார்கள். அவர்கள் இந்த சூரிய மண்டலத்திலுள்ள க்ரஹ மண்டலங்கள் ஏழிற்கும் தேவதைகள், ஒவ்வொரு க்ரஹ மண்டலத்திற்கும் அதிபதியாய் ஒவ்வொரு தேவதையுண்டு. ஒவ்வொரு க்ரஹமண்டலத்திலுள்ள ஜீவகோடிகளைப் பற்றிய வ்யவஹாரங்கள் அந்த க்ரஹமண்டலத்திற்கு அதிபதியான தேவதையைச் சேர்ந்தன. ஒவ்வொருக்ரஹ மண்டலத்திற்குச் சேர்ந்த லோகங்களுடைய அபிவிருத்தியும் அவைகளில் வஸிக்கின்ற ஜீவகோடிகளுடைய அபிவிருத்தியும் அந்தத் தேவதையின் பொறுப்பு.

நாம், பூமண்டலத்திலுள்ள எழுகோளங்களில் நான்காவது கோளத்தைச் சேர்ந்தவர்கள். அதில்தான் நம்முடைய விகாஸம் தற்காலத்தில் நடைபெற்று வருகின்றது. நமது க்ரஹ மண்டல

மாகிய பூமண்டலத்திற்கு அதிபதியாயும் தேவதையாயும் ஓர் ஈசுவரன் இருக்கிறார். இக்கமாதிரி இந்த சூரியமண்டலத்துக்குச் சேர்ந்த ஒவ்வொரு க்ரஹ மண்டலத்திற்கும் அதிபதியாயும் தேவதையாயும் ஒவ்வொரு ஈசுவரன் இருக்கிறார். நமது பூமண்டலத்துக்குச் சேர்ந்த ஈசுவரன் அதற்குச் சேர்ந்த கோளங்களின் விகாஸத்தை நடத்திவருகின்றார். அவரும் மூன்றுவிதமான ஆவிர்ப்பாவங்களாகத் தோன்றுகிறார்; அதாவது, சூரியமண்டலத்துக்கு அதிபதிகளான திரிமூர்த்திகளுடைய பிரதி பிம்பங்கள். ஏழுதளங்களடங்கிய தாமரைப்புஷ்பத்தைப்பற்றி, நாம் வாசித்திருக்கின்றோம். இந்த சூரியமண்டலமாகிய ப்ரஹ்மாண்ட முழுவதையும் ஏககாலத்தில் பார்ப்பதற்கு சக்தியுள்ள ஞானிகள், தாமரைப்புஷ்பம் முழுவதும் சூரியமண்டலமாகவும், தாமரைப் புஷ்பத்தின் ஏழுதளங்கள் சூரியமண்டலத்திலுள்ள ஏழு க்ரஹ மண்டலங்களாகவும், அவைகளுக்கு நடுவில்தான் இந்தசூரிய மண்டலத்துக்கு அதிபதிகளான திரிமூர்த்திக ளிருப்பதாகவும் பார்க்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். தாமரைப் புஷ்பத்தின் ஸம்க்ஞைபானது பொய்யல்ல. வாஸ்தவமே. பழையகாலத்து ரிஷிகள் நேருக்குநேராய், ஏழு தளங்களடங்கிய தாமரைப் புஷ்பம் மாதிரி, இந்த சூரியமண்டலத்தை தங்களுடைய திவ்யதிருஷ்டியைக்கொண்டு பார்த்தபடியால்தான், இந்த ப்ரஹ்மாண்டத்தைக் குறிப்பிட்டுக் காட்டும்படியாக ஏழுதளங்களடங்கிய தாமரைப்புஷ்பத்தை ஸமக்ஞைபாக வைத்திருக்கிறார்கள். நமது க்ரஹமண்டலமாகிய பூமண்டலத்துக்கு அதிபதியும் தேவதையுமாகிய ஈசுவரனைப் பற்றித்தான் நாம் முக்கியமாய்க் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்வழியாக சூரியமண்டலத்திற்கே அதிபதிகளான பெரிய திரிமூர்த்திகளைப்பற்றிக்கவனிக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

கே. கோடீசுவர ஐயர்.

# சிறுவர்க்குரிய விஷயம்.

## ஸ்வர்ணமணிகளுக்குக் கடிதம்.

அன்புள்ள ஸ்வர்ணமணிகளே!

நாமெல்லோரும் எப்போதும் சந்தோஷமாகவே யிருப்பதற்குப் பிரியமுள்ளவர்கள். நாம் ஒருபோதும் முகத்தைச் சுழித்துக்கொண்டு வியஸநப்படவேண்டுமென்று விரும்புகிறதில்லை. எப்போதும் முகமலர்ச்சியோடிருத்தல்தான் சிலாக்கியமாகும். பலர் பலவிதமாக சந்தோஷமடைகிறார்கள். எப்படியென்றால், சிலருக்கு ருசியான தின்பண்டங்களைத் தின்பதில் சந்தோஷம். சிலருக்கு விளையாடுவதிலேயே சந்தோஷம். சிலருக்கு நல்ல விலையுயர்ந்த சொக்காய்கள், உடுப்புகள் அணிந்துகொள்வதில் சந்தோஷம். சிலருக்கு வேடிக்கைகள் பார்ப்பதில் சந்தோஷம். மற்றும் சிலருக்கு நல்ல பாட்டுகள் பாடுவதிலும் கேட்பதிலும் பிரியம். இவ்விதமே பலருக்குப் பலவிதமாக, சந்தோஷத்திற்குக் காரணமான விஷயங்கள் மாறுபடுகின்றன. ஆயினும், ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தாராகிய நாம் சந்தோஷமடைவதற்கு ஒரு பொதுவான வழியுண்டு. அதாவது, பிறருக்குச் சுகத்தை யுண்டுபண்ணுவதன் மூலமாய் நாம் சந்தோஷமடைவதே.

"ஸ்நேஹம் என்னும் கம்பியால் கோக்கப்பட்டிருக்கிற ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தில் நான் ஒரு மணியாவேன்" என்று பிரதி காலையிலும் நாம் சொல்லுகிறோமல்லவா? நாம் அதைச் சொல்லும்போது ஸ்வர்ணமணிமாலை எவ்விதம் விளங்குகிறதென்று நம் மனதிற் கொள்கிறோம்?

தங்கத்தாலான மணிகளின் மாலையொன்றைக் கழுத்தில் போட்டுக்கொண்டிருக்கும் ஸ்திரீயைப்போல, இந்த பூமிதேவியானவளும் ஒரு மாலையைப் போட்டுக்கொண்டிருக்கிறாள். இந்த மாலைதான் நம்முடைய சங்கமாகிய ஸ்வர்ணமணிமாலை. இந்தச் சங்கத்திற் சேர்ந்திருக்கும் நாம் அனைவருமே பூமிதேவியின் மாலையிலுள்ள மணிகளாவோம். இப்பூமியானது நம்முடைய கண் பார்வையால் அளக்கக்கூடாதபடி, அவ்வளவு பெரியதாகவும் அகன்றும் உள்ள ஒரு கோளம் (உருண்டை வடிவமுள்ளது) ஆகையால், அதன் மாலையாகிய நம்முடைய சங்கமும் எல்லாவிடங்களிலும் விசாலமாகப் பரவியுள்ளது. இச்சங்கம் நம் இந்தியா தேசத்தில் மாத்திரமல்ல, எத்தனையோ மஹாஸமுத்திரங்களுக்கு அப்பால் உள்ள பல தேசங்களிலும் உள்ளது. இச்சங்கத்தின் மெம்பர்கள் அனைவரும் ஒரே தேசஸ்தர்கள் என்று சொல்லமுடியாது. ஆனால், பல தேசஸ்தர்களும், பல பாஷைகள் பேசுகிறவர்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். இச்-

சங்கத்தின் மெம்பர்கள், ஒருவர் மற்றொருவரை முன்பின் அறிந்திராவிட்டாலும், பிறரை ஸகோதரர்களைப்போல் மதிக்கும் சுபாவமுடையவர்களாகையால், இந்தச் சங்கம் அன்பு, கருணை என்னும் குணங்களால் ஜ்வலிக்கின்றது.

ஒரு மாலையின் மணிகள் ஒவ்வொன்றும் அவசியம் உறுதியாகவும், பளபளப்பாயும் இருந்தாலல்லாது, மாலையை ஒருவரும் விரும்பமாட்டார்கள். ஒரு மணி தேய்ந்துபோனதென்று வைத்துக்கொள்வோம். மாலைக்குக் கெடுதி நேரிடும். மாலை அறுந்துபோம். மற்றைய மணிகள்கூட உதிர்ந்துபோம். ஆகையால் ஸ்வர்ணமணிமாலைச்சங்கம் நேர்மையாய் நடைபெறுதலுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் எல்லாவிதத்திலும் ஒழுங்காகவே யிருக்கவேண்டும். உங்களில் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் சங்கத்திற்கு வராவிட்டால், மாலை அறுந்துபோனதற்குச் சமானமாகும். ஒழுங்காகச் சங்கத்திற்கு வருவதே உங்களுடைய முதற் கடமை. அநேகர் சங்கத்திற்கு ஒழுங்காக மட்டும் வருகிறார்கள்; பிரதி காலையிலும், ஸ்வர்ணமணிமாலையின் லக்ஷியங்களாகிய நான்கு வசநங்களையும் சிலர் படிக்கத் தவறிவிடுகிறார்கள். இன்னும் சிலர் இந்த இரண்டு கடமைகளையும் சரிவரச் செய்தபோதிலும், மற்றொரு முக்கியமான கடமையை மறந்துவிடுகிறார்கள். அதாவது, அந்நான்கு வசநங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறபடி நடக்க முயற்சிக்கிறதில்லை. இவ்விதமிராமல், எந்தக் கடமையையும் தவறவிடாமல் ஒழுங்காகச் செய்யவேண்டும். அப்போதுதான் ஸ்வர்ணமணிமாலையில், நாம் உறுதியும் பளபளப்புமுள்ள மணிகளாயிருக்கிறோமென் றருத்தம்.

ஒவ்வொரு நாள் காலையிலும் நான்கு வசநங்களையும் நாம் படிக்கும் போதெல்லாம், அவைகளின் அர்த்தத்தையும் மநதில் கிரஹித்துக்கொண்டே படிப்போமானால், அன்று பகல் எல்லாம் அடிக்கடி அவ்வெண்ணம் நம்முடைய மநத்திலுதிக்கும். அப்போது "மேன்மையான எண்ணங்களையே சிந்திக்கவும், இனியசொற்களையே பேசவும், நல்ல காரியங்களையே செய்யவும் நான் பழகுவேன்" என்று காலையிற் சொன்ன வசநமானது நம்முடைய ஞாபகத்திற்கு வரும். அந்தசமயங்களில் நாம் பாபமான காரியத்தைச்செய்யக்கூசுவோம். புண்யமான காரியத்தைச் செய்ய உற்சாகம் பெறுவோம்.

பாபம் என்பதென்ன? புண்யம் என்பதென்ன? இவைகளை நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டியது. பிறருக்கு ஹிம்ஸை

யையும், தொந்தரவையும், துக்கத்தையும் கொடுக்கக் கூடிய காரியங்களெல்லாம் பாபமாகும். பிறருக்கு நன்மையையும், உபகாரத்தையும், சுகத்தையும் கொடுக்கக்கூடிய காரியங்களெல்லாம் புண்யமாகும்.

உண்மையாகவே எப்போதும் புண்யமான எண்ணங்களையே நினைப்பதும், மதுரமான வார்த்தைகளையே பேசுவதும், அழகான காரியங்களையேசெய்வதும் அதிக சிரமந்தான். சிலருக்குமேலே சொன்னபடி பழகுவதற்கு இந்த ஒரு ஜன்மம் கூடப் போதாமல், இன்னும் அநேக ஜன்மங்களும் எடுக்கிறார்கள். பாபமான எண்ணங்களையும், வார்த்தைகளையும், காரியங்களையும், அவை நம்மிடமிருந்து நம்மறிவில்லாமல் வெளிவரும்பொழுது, உடனே நாம் தடுத்து புண்யமானவைகளைக் கைக்கொள்ளும் ஒவ்வொருசமயமும், ஸ்வர்ண மணிமாலையின் மணிகளாகிய நம்மிடமுள்ள அழுக்கு கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்துபோய் சுத்தமாகிவருகிறோம். நாம் அப்ளிகேஷன் கார்டுகளில் வாக்களித்திருக்கிறதை நினைத்து, பாபங்களைத் தவிர்த்தே வருவோமானால், அப்போது நாம் அதிகமாக உறுதிபெறுகிறோம்.

இந்த முயற்சியைத் தவிர இன்னுமொரு கடமையும் நமக்குண்டு. அதாவது "எனக்கு எதிர்ப்படும் எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவும், ஆதரவாகவும் நடத்த முயலுவேன்." என்றும் நாம் வாக்களித்திருக்கிறோமல்லவா? இதுவும் ஒரு முக்யமான கடமை. மணிகளாகிய நாம் இன்னும் அதிகமாகப் பிரகாசம் பெறுவதற்கேற்ற காரியமுமாம். கொஞ்சம் யோசிப்போமானால் இதன் உண்மையை நாம் அறிந்துகொள்வோம். பல சிறுமணிகள் சேர்ந்த ஒருமாலை, ஒரு பெரிய மணியாகத் தனித்திருப்பதைக் காட்டிலும் எவ்விதத்தில் சிலாக்கியம்? என்றால், ஒருமணியின் பிரகாசம் மற்றொன்றின்மேல் வீசுகின்றது. பிறகு மற்றொருமணியின் பிரகாசம் இன்னொன்றின்மேல் வீசுகின்றது. இவ்விதம் ஒளியானது, தனித்திருக்கும் ஒருமணியைக் காட்டிலும், மாலையிலேயே அதிகமாயிருக்கின்றது. ஆகையினால் மாலைதான், தனித்தமணியைக் காட்டிலும், அதிகமாக உபயோகப்படுகிறது. தனக்கு எதிர்ப்படும் உயிர்ப்பிராணிகளை அன்பாகவும் ஆதரவாகவும் நடத்தும் ஒரு பையன் உலகத்தின் க்ஷேமத்திற்கு ஹேதுகரமான ஒருசிறு ஊற்றுக்குச் சமானம் என்றாலும், அப்படி 20 பையன்கள் ஒன்று சேர்வார்களானால், அச்சங்கம் ஒருபெரிய சமுத்ரத்தைப் போல், உலகத்தின் க்ஷேமத்திற்

குக் காரணமான, பிரவர்கமாக அமையும். ஏனென்றால் புண்யத்தின் பிரவாகமானது அவ்வளவு வேகமாக அதிகரிக்கும் என்று ஒரு பெரியார் கூறியிருக்கிறார்.

இவ்வூராகிய மதுரையிற் போலவே, தஞ்சாவூர்ஜில்லாவிலுள்ள ஆழியூர் என்னும் ஊரிலும், வேட்டைக்காரன்புதூர் என்னும் ஊரிலும், சிதம்பரத்தினருகே தவார்த்தம் பேட்டை என்னும் ஊரிலும், புதிதாக ஸ்வர்ணமணிமாலைச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஸ்வர்ணமணிகள் ஒவ்வொருவரும் தத்தம் ஊரிலுள்ள நண்பர்களிடம் அன்புசெலுத்துவதோடும், ஒவ்வொருநாள் காலையிலும், மேலே சொல்லப்பட்டிருக்கிற அயல் ஊர்களிலுள்ள ஸ்வர்ணமணிகளிடமும் அன்பு செலுத்தி, அவர்கள் தேஹசௌக்கிய முள்ளவர்களாகவும், புத்திசாலிகளாகவும், நல்லவர்களாகவும், ஈசுவரனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்ய வேண்டியது மிக அவசியம். மேலே எழுதியுள்ளவைகளை யெல்லாம் சுருக்கமாக மநத்தில் அடியில் வருமாறு நினைத்துப் பார்ப்போம்:—

(1) பிறருக்கு சுகத்தை யுண்டு பண்ணுவதன் மூலமாகவே நாம் சந்தோஷத்தை யடையவேண்டும்.

(2) இந்த பூலோகத்திற்கு நம்முடைய சங்கமானது ஒரு சிறந்த ஸ்வர்ணமணிமாலை, அம்மாலையின்மணிகளாகிய நாம், அன்பு, கருணை என்ற குணங்களோடு பிரகாசிக்கவேண்டும்.

(3) ஸ்வர்ணமணிகளாகிய நாம் ஒவ்வொருவரும் ஒழுங்காக நம் கடமைகளைச் செய்யவேண்டும்.

(4) பாபத்தைத்தவிர்க்கவேண்டும். புண்யத்தையே செய்யவேண்டும். அதனால், அழுக்குநீங்கி, நாம் பளபளப்பான மணிகளாவோம்.

(5) தனித்திருத்தலைக் காட்டிலும், சங்கத்தில் சேர்ந்திருத்தல் ஏராளமான பிரயோஜனத்தைத் தரக்கூடியது.

(6) நம் ஊரிலுள்ள ஸ்வர்ண மணிகளிடத்தில் அன்பு செலுத்துவதுபோலவே, பிரதிதினமும் அயலூர்களிலுள்ள மெம்பர்களையும் சிந்திக்கவேண்டியது.

இதன் பிரகாரம் நீங்கள் அப்யஸித்து வருவீர்களே யானால், அடுத்தமாசம் வேறொரு கடிதம் உங்களுக்கெழுதுவேன்.

உங்கள் அன்புள்ள

வஸந்தாநந்தர்

## புஸ்தகவரவு.

"பொதுதர்ம சத்கீதமஞ்சரி" என்னும் புஸ்தகம் பிரஹ்மஸ்ரீ மாதவையரவர்களால் இயற்றப்பட்டது. அதில் நம்முடைய தாய் நாடாகிய இந்தியாவானது உயர் நலம் அமைவதற்குச் சாதனமான கல்வி, கைத்தொழில் இவைகளின் அபிவிருத்தி, ஆசாரச் சீர்திருத்தம், ஜனங்களுக்குள் ஐகமத்யம், தேசாபிமானம் முதலான பொது தர்மங்களைப் பற்றியும், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதற்கான ஒழுக்க முறைகளைப் பற்றியும் ஆங்கிலத்திலும் தமிழிலும் அனேக கிரந்தங்களிலிருந்து தற்கால நாகரிகத்திற்குப் பொருத்தமாயுள்ள பல அருமையான கருத்துக்களை எடுத்துச் சாதாரண ஜனங்களுக்கும் பிரயோஜனமாகும்படி சுலபமான தமிழில் வெளியிட்டிருப்பதும் தவிர நம்முடைய சிறுவர்களும் சிறுமியர்களும் மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டாடும்படி பல வர்ண மெட்டுகளில் கீர்த்தனங்களாகவும், கும்மிகளாகவும் கவனம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழறிந்த யாவரும் இந்தப் புஸ்தகத்தை வாங்கிப் படித்து அதிலடங்கிய உயர்ந்த கருத்துக்களை உட்கொள்ளுவார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா 4 தான். வேண்டுவோர் சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீநிவாஸவரதாசாரி அண்டு கம்பெனியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

"மெய்யறம்" ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள "மனம் போல வாழ்வு," "அகமே புறம்" என்னும் இரண்டு நூல்களையும் வாங்கிப்படித்து உருசிகண்டவர்கள் ஒவ்வொருவரும் இப்பொழுது அச்சிடப்பட்டிருக்கும் "மெய்யறம்" என்னும் இந்த நூலையும் இனி அச்சிடப்படும் மற்ற புஸ்தகங்களையும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்து, வாங்கித் திரும்பத் திரும்பப் படித்துப் பயன்படுவார்களென்பதில் சந்தேகமில்லை. மெய்யறம் என்னும் இந்தப் புதியநூலில் இம்மை மறுமைப்பயன்களையும் நாம் அடைவதற்கு இன்றியமையாத ஸாதனங்களாயுள்ள சகல ஒழுங்குகளையும் 125 அதிகாரங்களாக வகுத்து அவைகளைப் பற்றித் தெளிவாயும், சுலபமாயும் சுருக்கமாயும் இனிய செந்தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவருடைய நூல்களை வாங்கிப் படித்திராதவர்களும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடையக் கோருகிறோம். இதன் விலை அணா 8. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூர், வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கட்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

"என் குருநாதன்" நம்முடைய நாட்டில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லையாயினும், அவர்கள் தமிழ்ப்பாஷை தெரியாதவர்களானபடியால் இந்தியாவிலும் அமெரிக்காவிலும், மற்ற தேசங்களிலும் அவர்கள் செய்த அருமையான உபந்நியாஸங்களும், அவர்கள் எழுதிய சிறந்த வியாஸங்களும் ஆங்கில பாஷையிலிருந்தது பற்றி தமிழுலகத்தாருக்கு

இதுகாறும் உபயோகமற்றிருந்தன. அந்தக் குறையை ஒருவாறு நீக்கும் பொருட்டு சிவகங்கையிலுள்ள ராமகிருஷ்ண விவேகானந்த வேதாந்த சங்கத்தார் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளால் அமெரிக்காவில் "My Master" என்னும் விஷயத்தைப்பற்றி ஆங்கிலத்தில் செய்த உபந்யாஸத்தைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். தமிழறிஞர்கள் யாவரும் வாங்கிப் படித்து, இதுபோல ஷை சங்கத்தார் அன்பு கூர்ந்து மற்ற உபந்யாஸங்களையும் மொழி பெயர்த்து அச்சிடும்படி தூண்டுதல் உண்டாகும்படி செய்யக் கோருகிறோம்.

---

**ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் குணவைபவம்:**—ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் குருநாதனாகிய ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸருடைய மஹிமையைப்பற்றி, ஸ்ரீபிரதாப சந்திர மஜூம்தாரவர்களால் சுமார் 35 வருஷங்களுக்கு முன் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வியாஸத்தை சிவகங்கையிலிருக்கும் விவேகானந்தவேதாந்த சங்கத்தார் தமிழ் நாட்டாருக்கு உபகாரமாக தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு அதை எல்லாரும் வாங்கிப்படிக்கும் பொருட்டு 9 பைசா விலை வைத்திருக்கிறார்கள். அதை எல்லாரும் வாங்கிப்படித்தால் மட்டிலும் அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமத்திற்குக் கைமாறாகும்.

---

## சமாசாரம்.

---

**ஸ்திரீகளும் பட்டங்களும்:**—பொது நன்மைக்காகப் பாடுபட்டு வரும் மஹாநுபாவர்களுக்கு அறிகுறியாக ஒவ்வொரு வருஷப்பிறப்பு தினத்திலும் அரசன் பிறந்த தினத்திலும் ராஜாங்கத்தார் பட்டம் அளித்து வருகிறார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். 'Women's Freedom League' என்னும் ஸ்திரீ ஸ்வதந்திர வாதி சங்கத்தார் நம்முடைய ராஜாங்கத்தில் அப்படிப் பட்ட கௌரவமான பட்டங்களை வகிக்கத் தகுந்த அனேக ஸ்திரீகள் இருந்தும், இதுவரை ஸ்திரீகளுக்கே அவ்விதமான கௌரவம் காட்டப்படவில்லை என்று வற்புறுத்திக் காட்டியது மல்லாமல், இனிமேல் வருஷா வருஷம் தவறாமல் புருஷனாயிருந்தாலும், ஸ்திரீயா யிருந்தாலும் வித்தியாசம் பாராட்டாமல், யோக்கியதைக்குத் தகுந்தபடி பட்டம் கொடுக்க வேண்டுமென்று கண்டு சக்கிரவர்த்தியவர்களுக்கும், பிரதான மந்திரியவர்களுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்களாம். அந்த விண்ணப்பங்களில் ஒரு தேசத்தில் மாத்திரமல்லாமல், உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் பொது நன்மைக்காக உழைத்து வரும் ஸ்திரீ ரத்தினமாக மாதுஸ்ரீ அன்னிபெசண்டம்மையாரவர்களை, முதன்மையாகக் குறிப்பிட்டுக் காட்டி எழுதியனுப்பியிருக்கிறார்களாம்.

**பெண் கல்வி அபிவிருத்தி:**— மைசூர் மகாராஜா காலேஜில் பெண் கல்வி அபிவிருத்திக்காக உழைத்து வரும் ஸ்ரீமதி பாகீரதியம்மாள், தான் சிறு

மியாயிருந்து படித்த காலத்தில் தன்னுடைய ஸ்காலர்ஷிப் பணத்திலிருந்துமீ 1 ரூபாயாகப் பெண்கல்வியின் அபிவிருத்திக்காகச் சேர்த்துவந்தார்களாம். அப்படியேதான் தருந்த வயது வந்த பின்னும் பெண்கல்வி அபிவிருத்தியில் தனக்கு உள்ள ஊக்கத்தினால் பெண்களுக்கு கல்வி கற்பித்து உழைத்து வருவதுமன்றி, தன்னுடைய வரும்படியிலிருந்து சிறுகச் சிறுக சிரமப்பட்டு ஒவ்வொரு மீத்திலும் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்துவந்தார்களாம். அப்படிச் சென்ற 29 வருஷமாகச்சேர்த்துவந்த தொகை ஆயிரம்ரூபாயானவுடன் அதை மைசூர் ராஜாங்கத்தாருக்கு அனுப்பி அந்தத்தொகையின் வரும்படியிலிருந்து இரண்டு பெண்பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வருஷமும் பரிசுகள் கொடுக்கும் படி கேட்டுக்கொண்டிருக்கிறார்களாம். நம்முடைய நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸ்திரீகளுக்கும் அப்படிப்பட்ட ஊக்கம் உண்டானாலல்லவா பெண் கல்வி விரைவாக அபிவிருத்தியாகும்?

**ஸ்திரீகளுக்கு வீடுதோறும் போய்க் கல்விகற்பித்தல்:**—ஸ்திரீகளுக்கு கல்வி மிகவும் அவசியம் என்பது நாம் நன்றாய் அறிந்திருந்த போதிலும் அவர்களுக்குத் தருந்த வயது வந்தவுடன் நம்முடைய தேசாசாரப்படி பெரும்பாலும் அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படிக்கக் கூடாமையால் மேல் படிப்புக்கு இடமில்லாமல் எழுதப்படிக்க மட்டிலும் தெரிந்ததோடு படிப்பை நிறுத்திவிடவேண்டியதாயிருக்கிறது. அந்தக் குறையை நிவிர்த்திசெய்யும் பொருட்டு ஸ்திரீகளுக்கு சாவகாசமானநேரத்தில் வீடுதோறும் போய் அவர்களுக்குக்கல்வி கற்பிப்பதற்காக பூனாவிலுள்ள ஸேவாஸாதன ஸமாஜதார் ஒரு கமிட்டி ஏற்படுத்தி கல்வி கற்பித்து வருகிறார்களாம். பம்பாயில் ஹைகோர்ட்டு ஜட்ஜ் உத்தியோகம் வகித்துக் காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ரானடே அவர்களின் ஸம்ஸாரம் ஸ்ரீமதி ராமாபாய் அம்மாள் அவர்கள் அந்தக் கமிட்டிக்குப் பிரசிடெண்டாகவும் இந்திய ஊழிய சங்கத்தாரின் மெம்பரான ஜி. கே. தேவதாரவர்கள் ஷை கமிட்டிக்குக் காரியதரிசியாகவும் இருந்து சிறப்பாக நடத்தி வருகிறார்களாம்.

**படிக்கும் சிறுவர்களின் சரீரசௌக்கிய ஆராய்ச்சி:**—நம்முடைய பெரிய நகரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகளின் சரீரசௌக்கியம், படிக்கும் முறையிலுள்ள குறைகளாலோ அல்லது நகரங்களில் அசுத்தமான காற்றை உட்கொள்ளுவதாலோ, வரவர க்ஷீணித்து வருகிறது. அதை ஒருவாறு தடுக்கும் பொருட்டு பார்ஸி ஜாதியார் கூட்டம் கூடி, பள்ளிக்கூடங்களில் படிக்கும் தங்களுடைய சிறுவர்களின் தேக ஸ்திதியைச் சோதித்துப் பார்க்கவும், உள்ள குறைகளைத் தெரிந்து கொள்ளவும் சீர்திருத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். அதற்காகப் புருஷர்களில் 27 டாக்டர்களும், ஸ்திரீகளில் 8 டாக்டர்களும் ஆக 35 டாக்டர்கள் வரும்படியை எதிர்பார்க்காமல் இனமாக உழைப்பதாக ஒப்புக்கொண்டு வேண்டிய வேலையைச் செய்துவருகிறார்கள். பம்பாயிலுள்ள வாடியா தர்ம

பரிபாலன டிரஸ்டிகள் அது விஷயமாய் வேண்டிய பொருளுதவி செய்வது மன்றி பம்பாய் நகரத்திற் கருகேயுள்ள ஆந்தேரி என்னும் இடத்திலுள்ள மால்காம்பரக் என்னும் நேர்த்தியான பங்களாவை விடுமுறை நாட்களில் சிறுவர்கள் பம்பாய்நகரத்தை விட்டுப்போய் இருந்து சுத்தமான காற்றில் சந்தோஷமாய் உலாவித்திரிந்து வருவதற்காக இனுமாய்க் கொடுத்திருப்பதாயும் தெரிய வருகிறது.

---

சீவில் கோர்ட்டில் வியாச்சியங்கள்:—கோர்ட்டில் வியாச்சியத்திற்குப் போகிறவர்களின் நிலைமை வரவர மிகவும் பரிதபிக்கத் தகுந்ததாயிருக்கிறது. வியவஹாரம் முடிய எவ்வளவு வருஷமாகிறது! என்ன பணச்செலவு! ஏதாவது ஒருவிதமாக வழக்கு தீர்மானமாவதற்குமுன் அவர்களுடைய கதி அப்பத்தைத் திருடின பூனைகள் குரங்கினிடம் மத்தியஸ்தத்துக்குப் போனகதைபோலாய் விடுகிறது. ஸ்வதேச ராஜாங்கங்கள் நீங்கலாக பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள சிவில் கோர்ட்டுகளில் மட்டும் 1912 ஞு த்தில 2,085,471 சிவில் வியாச்சியங்கள் தாக்கல் செய்யப்பட்டனவாம். பரோடா தேசத்தில் ஏற்படுத்தியிருப்பதும்பால பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தினுல் மட்டும் ஜனங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்.

---

திருவாங்கூர் சமஸ்தானத்தில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள்:—

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் 5 பஞ்சாயத்தார்களை நியமித்து 30 ரூ வரை மதிப்புள்ள எல்லா வியாச்சியங்களையும் அவர்கள் கோர்ட்டாக இருந்து தீர்ப்பளிக்க வேண்டுமென்றும், அதற்கு மேல் 200 ரூ வரை மதிப்புள்ள வியாச்சியங்களை இரண்டு தரப்பு கக்ஷிக்காரர்களும் சம்மதித்தால் ஷெ பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் விசாரித்து முடிவுசெய்ய அதிகாரம் உண்டென்றும், இரண்டு வருஷத்துக் கொருதரம் ஷெ பஞ்சாயத்துப் புதிதாய் நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும் சட்டம் ஏற்படுத்தி அந்தப்படி நடந்து வருகிறது.

பிரயாகையில் ஸேவாசிரமம்:—ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் அல்லஹபாத் என்ற பிரயாகையில் பொதுஜன கைங்கரியத்துக்காக "ஸேவாசிரமம்" என்ற ஒரு தர்ம வைத்தியசாலை ஏற்படுத்திச் சென்ற மூன்று வருஷமாய் நடத்தி வருகிருர்களாம். அதில் சென்ற வருஷத்தில் 4416 ஹிந்துக்களும், 523 மகமதியர்களும், 88 கிறிஸ்தவர்களும், 33 மற்ற ஜாதியர்களும் ஆக 5060 பேர்கள் சிகித்ஸை செய்து ஸ்வஸ்தப்பட்டார்களாம். தென் இந்தியாவிலிருந்து போகும் ஏழைப் பிரயாணிகளுக்கு மிகவும் உபகாரமாயிருக்கிறதாம். பொருளுதவி கிடைக்கும் பக்ஷத்தில் அந்தத்தருமத்தை இன்னும் விருத்திசெய்யத் தயாராயிருக்கிருர்கள். பிரியமுள்ளவர் எவ்வளவு அற்பமானுலும்சரி, இயன்றமட்டில் திரவிய ஸகாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிருர்கள்.